பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆனி 12 | திங்கட்கிழமை | 26.06.2023 | கதிர் 227

# நாபாவின் தீர்க்கதரிசனத்தை ஏற்றிருந்தால் முள்ளிவாய்க்காலைத் தவிர்த்திருக்கலாம்

## மிதவாத கட்சிகளும் ஆயுதக் குழுக்களும் அதற்கு மறுத்துவிட்டன என்கிறது ஈபிஆர்எல்எவ் அமைப்பு



மறைந்த நம் தோழர் பத்மநாபா அன்று இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்று தீர்க்க தரிசனமாக எடுத்த முடிவை ஏற்றிருந்தால் எமது மக்களுக்கு ஏற்பட்ட முள்ளிவாய்க்கால் பேரிழப்பைக்கூடத் தவிர்த்திருக்கலாம், சமஷ்டியை அடையும் தூரத்துக்குக்கூட வந்திருக்க முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈபிஆர்எல்எவ் அமைப்பின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன். ஈபிஆர்எல்எவ் அமைப்பின் 33ஆவது தியாகிகள் தின ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜூன் 28 புதன்கிழமை ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் தவறாது அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கூட்டம் எதற்காக என்று காரணம் சொல்லப்படவில்லை. இது தவிர ஜூன் 30, ஜூலை 1,2 ஆகிய தினங்களிலும் அமைச்சர்கள் அனைவரும் நாட்டில் இருக்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் இருந்து அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. எவரும் வெளிநாடு செல்லக்கூடாது ஏன்று அதில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது. இதுவும் எதற்காகவென்று தெரியாது. அமைச்சர்கள் ஒருவரை ஒருவர் தொலைபேசியில் அழைத்து ஏன் இந்தக் கூட்டமாம் என்று ஆளையாள் விசாரித்து வருகின்றனர்.

இதற்கிடையில் ஜனாதிபதி லண்டனுக்குப் புறப்படமுன்னர் எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பெடுத்து 48 செக்கன்கள் மட்டும் பேசினார். தான் நாடு திரும்பியதும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பிலான தனது முன்மொழிவை ☞ 2

## தீயில் எரிந்து பெண் இறப்பு 25 வயது இளைஞன் கைது

ந.லோகதயாளன்.

தீக் காயம் காரணமாக அளவெட்டியைச் சேர்ந்த பெண் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் 25 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டம், அளவெட்டிப் பகுதியில் ஜூன் 21 தீயில் எரிந்த நிலையில் 42 வயது குடும்பப்பெண் ஒருவர் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஆனால் சிகிச்சை பயனின்றி சனிக்கிழமை அவர் உயிரிழந்தார்.

இவரது இறப்புத் தொடர்பாக அயலில் வசிக்கும் 25 வயது இளைஞர் ☞ 2

## கோட்டா எம்மையெல்லாம் தோல்வியடைய வைத்தார்

### பெரமுன உறுப்பினர் புலம்பல்

கோட்டாபய ராஜபக் ஷ எம்மைத் தோல்வி அடையச் செய்துவிட்டார் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரி வித்துள்ளார்.

திவுலுப்பிட்டியவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உஷ்ராயடற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் சீர்த்திருந்தங்களை மேற்கொள்வதற்கான யுக புருசராகவே கோட்டாபயவை கருதினோம்.

ஆவரை ஜனாதிபதி ஆக்குவதற்காக அருப்பணியாற்றினோம். ஆனால் அவர் எம்மைத் தோற்கடித்துவிட்டார். எம்மை ஒதுக்கி வைப்பதற்கு வித்திட்டுவிட்டர். இவ்வாறான நிலையில் பதவி ஏற்றுக்கொண்டுள்ள ஜனாபதி ரணில் விக்கிரமசிங்க தவறுகளை இழைக்கக் கூடாது.

அவர் தவறுகளை இழைப்பதற்கு இடமளிக்க முடியாது. ஆகவே மக்களுக்கான நிவாரணப் பணிகள் விடயத்தில் தீர்க்கமான தீர்மானத்தினை எடுக்க வேண்டும் என்றார்.

## 9 லட்சம் கடவுச் சீட்டுக்கள் 2022 மட்டும் விநியோகம்

2022 ஆம் ஆண்டில் 9 இலட்சத்து 11 ஆயிரத்து 689 கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் வருடாந்த செயற்றிறன் அறிக்கை மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திணைக்களத்தின் வருடாந்த செயற்றிறன் அறிக்கை வெளியிடப்படும், கடந்த 5 ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான கடவுச்சீட்டுகள் 2022 ஆம் ஆண்டே விநியோகிக்கப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட கடவுச் சீட்டுகளின் எண்ணிக்கையைவிட 2022 ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 29 ஆயிரத்து 138 கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் கட்டுநாயக்க விமானநிலையத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை 20 இலட்சத்து 18 ஆயிரத்து 66 ஆகப் ☞ 2

## பொலிஸ் மா அதிபருக்கு 2ஆவது சேவை நீடிப்பு

### புதிய நியமனம் இன்னும் இல்லை

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் சேவைக்காலம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில், அவருக்கு இரண்டாவது சேவை நீடிப்பு வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதிய பொலிஸ்மா அதிபர் தொடர்பில் அரசியலமைப்பு பேரவைக்கு இது வரை பரிந்துரைகள் வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ்மா அதிபர் விக்ரமரத்ன 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி பொலிஸ் சேவையில் இருந்து ☞ 2

## வாள்களுடன் 5 பேர் குருநகரில் கைது

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநகர் பகுதியில் வாள்களுடன் பயணித்த ஐவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகர்ப் பகுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் 2 மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் ஐவர் பயணிப்பதாக யாழ்.பிரதேச குற்றப்புலனாய்வுப் பணியக அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம்

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொலிசார் ஐவரையும் கைது செய்துள்ளனர். ☞ 2

## ஒரே சீனக் கொள்கைக்கு இலங்கை முழு ஆதரவு

### அங்கு சென்ற அலி சப்ரி தெரிவிப்பு

இலங்கை எப்போதும் ஒரே சீனக் கொள்கையை உறுதியாக ஆதரிக்கின்றதென வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

சீனாவில் சீன அயலுறவு அமைச்சர் சின் காங்கை சந்தித்தபோஹிது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனா இலங்கையின் மிகச்சிறந்த நண்பன் முக்கியமான அபிவிருத்தியின் சகாவாகத் திகழ்கின்றது. சீனாவின் தன்னலமற்ற உதவியை இலங்கை பாராட்டுகின்றது. சீனநிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செயவதற்கு வருகை தரவேண்டும் என்றார்.

இதேவேளை, இலங்கையும் சீனாவும் ஒருவரையொருவர் எப்போதும் மதித்துள்ளன ஆதரித்துள்ளன. சகவாழ்வு பரஸ்பரம் ☞ 2

## பழிவாங்கும் நோக்கம் ஏதுமில்லை நாமல் ராஜபக்ஷ நேற்று தெரிவிப்பு



பழிவாங்குவதை நோக்கமாகக் கொண்டு நாம் செயற்படவில்லை என்று பொதுஜனபெரமுனவின் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சூரியவெளவில் நேற்று நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு மே 9 இந்த நாட்டில் வன்முறையான சூழல் காணப்பட்டது. எமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த நாட்டின் மூத்த அரசியல் தலைவர்களின் சிலைகள் உடைக்கப்பட்டன.

அரசியலில் பிரவேசித்தவர்கள் என்ற அடிப்படையில் இதனை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. மக்களின் வெளிப்பாடுகளை இட்டு கவலையடைவதில் பயனில்லை.

நாம் நிச்சமாக அந்த விடயங்களை ஏற்றுக்கொண்டு மாற்றங்களைக் காண வேண்டும். பழிக்குப் பழிவாங்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

## விபத்தில் 9 பேர் காயம்



யாழ்ப்பாணம் - கொடிகாமம் ஏ-9 வீதியில் தனியார் பேருந்தும் ஹயஸ் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாக்கியதில் 9 பேர் காயமடைந்தனர். .

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கி பயணித்த தனியார் பேருந்தும் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹயஸ் வாகனமும் மோதியே விபத்து நிகழ்ந்தது. மதியம் 12.45 மணியளவில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த 9 பேரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.-

## மல்லாவி விபத்தில் நேற்று 24 வயது இளைஞன் சாவு



(ஜெகதீஸ்வரன் காவியா)

மல்லாவியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.


முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவியில் இடம்பெற்ற இந்த விபத்தில் வவுனியா தேக்கவத்தை பகுதியை சேர்ந்த கமலதாஸ் கபில்தாஸ் (லயது 26) என்ற இளைஞர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாவி, திருநகர் பகுதியை சேர்ந்த கமலநாதன் சபேசன் என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

முல்லைத்தீவு-மல்லாவி பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளுடன் சிறியரக ☞ 2

## கோட்டாவுக்குப் பதில் சமலை வேட்பாளர் ஆக்கியிருக்கலாம்

### இப்போது கவலைப்படும் அமைச்சர் பவித்திரா



கோட்டாவுக்குப் பதில் சமல் ராஜபக் ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்திருக்கலாம் என்று அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

சூரியவெளவில் நேற்று நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கு பதிலாக சமல் ராஜபக்ஷ போன்ற ஒருவரை வேட்பாளராக நியமித்திருந்தால் எமக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் எமக்கு அரசியல் குரோதம் இருந்தது, எனினும், நாம் கட்சி என்ற வகையில் சரியான தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு அவரை ஜனாதிபதியாக்கினோம்.

அவர் தற்போது சரியான தலைமைத்துவத்தினை வழங்கி வருகின்றார். அவரின் தலைமைத்துவம் பிழைத்துப்போவதற்கு இடமளிக்க முடியாது. ஏனெனறால் கோட்டாபய ராஜபக்ஷ நம்பிக்கைகளை சிதைது விட்டார்ஷ-என்றார்.

## 'அஸ்வெசும' பயனாளிகளுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது

### ஜூலை 10 வரை மேன்முறையீட்டுக்கு வசதி

அஸ்வெசும அரச உதவித் திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்று கருதப்படுவோர் ஜூலை 10 வரை தமது மேன்முறையீட்டைச் செய்ய முடியும். இதன்படி, பொருளாதார ஒத்துழைப்பு தேவைப்படும் நபர் அல்லது குடும்பம் இந்த நன்மையை இழந்திருந்தால், இந்தக் காலப்பகுதியில் பிரதேச செயலகங்கள் ஊடாக விசாரித்து அதனை சரிசெய்வதற்கு வாய்ப்பு உள்ளது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் உங்கள் பெயர் இடம்பெறாவிட்டாலோ அல்லது தகுதியில்லாத நபரின் பெயர் அதில் இடம்பெற்றிருந்தாலோ, பிரதேச செயலக அலுவலகங்களில் தெரியப்படுத்தி மேன்முறையீடு செய்யப்படவேண்டும்.

இவ்வாறு ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றநிதிக்குழுவிடம் முன்வைப்பார்என்றும்அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் முன்வைப்பார் என்றும் அந்த அழைப்பில் அவர் தெரிவித்தார். அத்துடன் அழைப்பைக் கட் பண் ணிவிட்டார்.

இந்தவிடயம்தொடர்பாக ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கும் விதமாகவே ஜூன் 28 கூட்டம் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கின்றது என்று கருதப்படுகின்றது. ஆட்சியாளர்கள் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றில் இருந்து பெருமளவு கடன்களைப் பெற்றுள்ள நிலையில், அவற்றைக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்துவிடக்கூடும் என்கிற அச்சம் நிலவுகின்றது. இதனால் தனியார் நிறுவன ஊழியர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும். எனவே இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை எதிர்ப்பது என்று எதிர்க் கட்சிகள் கூட்டாக இணக்கம் தெரிவித்துள்ளன. ஆனால், ஆளும் தரப்பு இன்னமும் பெரும்பான்மையைக் கொண்டிருப்பதால் அதை வைத்து நாடாளுமன்றத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ரணிலுக்குப் பிரச்சினைகள் இல்லை.

இருப்பினும் மொட்டுக் கட்சியும் இதனை எதிர்க்குமா என்பதே இப்போதுள்ள கேள்வி. கடந்த வாரம் மொட்டுவின் தேசிய அமைப்பாளரானபஸில்ராஜபக்சவைச் சந்தித்த கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர், தமது கட்சி கேட்ட அமைச்சுப் பதவிகளை ரணில் இன்னும் தராத காரணத்தால் அவரது திட்டங்களைப் புறக்கணிக்க வேண்டும் நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனரார். அது நடந்தால் ரணில் சில சமயம் சிக்கலை எதிர்கொள்ளக்கூடும்.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

எடுத்தார். அவரது இழப்பு தமிழ் இனத்திற்குப் பேரிழப்பாகும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படியான அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் கிடைத்த இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையை அவர் தீர்க்கதரிசனமாக ஏற்றுக் கொண்டார். ஆனால் மிதவாதத் தலைவர்களும் ஆயுதக் குழுக்களும் இந்தத் தீர்க்கதரிசனமான முடிவுக்கு ஆதரவு வழங்கவில்லை. அவ்வாறு அன்று அவர் முடிவை ஏற்றிருந்தால் எம் மக்கள் கண்ட முள்ளி வாய்க்கால் பேரழிவையே தடுத்திருக்கலாம், சமஷ்டியை அடையும் தூரத்திற்கும் வந்திருக்க முடியும். இன்று ஆயுதப் போராட்டத்தோடு சம்பந்தப்பட்ட ஐந்து கட்சிகள் ஒருங்கிணைந்துள்ள தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணி, இறுக்கமான, பலமான, பட்டறிவுடன் அரசியல் தீர்வு தொடர்பில் புதிய பாதையில் பயணித்து வருகின்றது. நமது தியாகிகள் கொண்ட இலட்சியங்களை அடைவதற்கு, நிரந்தரமானதும் கௌரவமானதுமான அரசியல் தீர்வை நோக்கி எம் பயணம் தொடரும் -என்றார்.- O

## 'அஸ்வெசும'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார் பிரதமர் தினேஸ் குணவர்த்தன. இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், ஏழைகள் மற்றும் மிகவும் ஏழ்மையானவர்கள் ஆகிய 4 சமூகப் பிரிவுகளின் கீழ், அஸ்வெசும நலன்புரி நன்மைகள் வழங்கப்படுவதுடன், ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழமை போன்று உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய நலன்புரி கொடுப்பனவுகளுக்குத் தகுதியானவர்களைக் கண்டறியும் வேலைத்திட்டத்தின் தரவு சேகரிப்புப் பணியில் 6728 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இதில் 3190 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், 494 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், 205 கிராம உத்தியோகத்தர்களும், 1127 இதர உத்தியோகத்தர்களும், 1712 தற்காலிக ஆட்களும் அடங்குவர்.

பிரதேச அலுவலக மட்டத்தில், மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழுக்கள் தரவுகளைக் கண்காணித்து, மாவட்டச் செயலாளரின் அனுமதியைப் பெற்ற பிறகு, தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

எவ்வாறாயினும், இந்த செயற்பாட்டில் குறைபாடுகள் காணப்படுவதாகச் சில தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு மேன்முறையீடுகள் மற்றும்முறைப்பாடுகளைசமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை ஜூலை 10 ஆம் திகதி வரையில்நீடிப்பதாகமாகாண சபைகள்மற்றும்உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் என்ற வகையில்அறிவிக்கின்றேன்.

பதில் நிதியமைச்சர் ஷெஹான்சேமசிங்கமற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோரும் இது தொடர்பில் தேவையான பணிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதன்படி, பொருளாதார ஒத்துழைப்பு தேவைப்படும் நபர் அல்லது குடும்பம் இந்த நன்மையை இழந்திருந்தால், இந்தக் காலப்பகுதியில்பிரதேசசெயலகங்கள் ஊடாக விசாரித்து அதனை சரிசெய்வதற்கு வாய்ப்பு உள்ளது.

அஸ்வெசும திட்டத்தின் அடிப்படை நோக்கம் பொருளாதார ஸ்திரத்தன்மை தேவைப்படும் மக்களுக்குத் தேவையான பங்களிப்பை வழங்குவதே தவிர, வெறும் அரசியல் செயற்பாட்டின் அடிப்படையில் பல்வேறு தரப்பினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதல்ல.

பல்வேறு பிரசாரங்களாலும் தனிப்பட்ட அழுத்தங்களாலும் குழப்பமடையாமல், தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் உங்கள் பெயர் இடம் பெறாவிட்டாலோ அல்லது தகுதியில்லாத நபரின் பெயர் அதில் இடம் பெற்றிருந்தாலோ, பிரதேச செயலக அலுவலகங்களின் ஊடாக அது தொடர்பில் ஆராயுமாறும் விண்ணப்பதாரர்களுக்கு எழும்எந்தபிரச்சினையையும் பிரதேசசெயலாளரின் ஊடாக தீர்த்துக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாள்களுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைவரும் 20 முதல் 22 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் எனத் தெரிய வருகின்றது.

ஐவரும் இன்று நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளனர்.

## பொலிஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வு பெறவிருந்தார். எனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏப்ரல் 6 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அவரது பதவிக்காலத்தை மூன்று மாதங்களுக்கு நீடித்தார்.

இந்த விசேட பதவி நீடிப்பு இன்றுடன் நிறைவடையவுள்ள போதிலும், புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களான தேசபந்து தென்னகோன், நிலந்த ஜயவர்தன, லலித் பத்திநாயக்க, பிரியந்த வீரசூரிய மற்றும் அஜித் ரோஹனஆகியோர்பொலிஸ் திணைக்களத்தில் சேவை மூப்பு நிலையில் உள்ளனர்.

அரசமைப்புபேரவையில் எதிர்வரும் கூட்டத்திற்கான தீர்மானம் எடுக்கப்படாத நிலையில் புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் உடனடியாக மேற்கொள்ளப்பட மாட்டாதென உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயத்தின் பின்னர் புதிய பொலிஸ்மா அதிபர் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

# திருமலையில் மான்களைப் பாதுகாக்க கிழக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை

(எப்.முபாரக்)

திருகோணமலை நகரில் உள்ள மான்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கும் செயற்பாடு சனிக்கிழமை தொடங்கியது.

கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம், நகரசபையின் அனுசரணையுடன் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது

திருகோணமலைநகரசபையும்பட்டினமும் சூழலும் பிரதேச செயலகமும் இணைந்து திருகோணமலை நகரில் உள்ள மான்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்கும் இந்தச் செயற்திட்டத்தை மேற்கொள்கின்றன. திட்டத்தின் தொடக்க நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தவிசாளர், திருகோணமலை நகர சபை செயலாளர், திருகோணமலை பிரதேச செயலாளர், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்டப் பலர் கலந்துகொண்டிருந்தனர். கடந்த காலங்களில் திருகோணமலையில் 20க்கும் மேற்பட்ட மான்கள் பிளாஸ்டிக் கழிவுகளை உண்டு உயிரிழந்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனையில் தெரியவந்துள்ளது. மான்களின் பாதுகாப்பு, உணவு போன்ற விடயங்களைக் கவனிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில்அதிகமானமான்களைக்கொண்ட இடமாக திருகோணமலை திகழும் எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.



# மாவடி கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிகேம்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவுமாவடிஸ்ரீகந்தசுவாமிஆலயத்தின் மகா கும்பாபிகேம் சனிக்கிழமை விசேட கர்மாரம்ப கிரியைகளுடன் ஆரம்பமானது. இன்று திங்கட்கிழமை முடிவடையும், நாளை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும். மறுநாள் ஜூன் 28 காலை 9 மணிக்கு மகா கும்பாபிகேம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை செயலாளர் சின்னத்தம்பி.சிவகுமார் தெரிவித்தார்.

## 9 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவாகியுள்ளது.

அவர்களில் 11 இலட்சத்து 24 ஆயிரத்து 22 இலங்கையர்களும் 8 இலட்சத்து 64 நான்காயிரத்து 648 வெளிநாட்டவர்களும் உள்ளடங்குகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீயில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரது கையிலும் தீ காயம் உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒரே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நன்மைக்குரிய ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கான உதாரணமாக திகழ்கின்றன என்று சீன அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மல்லாவி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம் ஒன்று மோதியே குறித்த விபத்து சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது இரண்டு வாகனங்களும் தீபற்றி எறிந்துள்ளதாகவும் அதில் மோட்டார் சைக்கிள் முற்றிலுமாக சேதமடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டுவருகின்ற இதே வேளை கிளிநொச்சி தடயவியல் பொலிசார் சம்பவ இடத்தில் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர்

## நாபாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறிதியானதும் பிரதானமானதுமான நிகழ்வு கிழக்கின் முக்கிய தமிழ்ப் பிரதேசமான காரைதீவில் நேற்று உணர்வுபூர்வமாக நடைபெற்றது. அதில் தலைமை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈபிஆர்எல்எவ் அமைப்பின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர், எஸ்.புண்ணியநாதன் (கரன்) தலைமையிலான குழுவினரின் ஏற்பாட்டிலும்முன்னணியின் அரசியல்உயர்பீடஉறுப்பினர் சின்னையாவீன் (சர்மா) தலைமையிலும் நிகழ்வு இடம்பெற்றது. காரைதீவுவிபுலானந்தா கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் காரைதீவு முன்னாள் பிரதேச சபைத்தவிசாளர்செல்லையா இராசையா, காரைதீவு ஆலயங்களின் அறங்காவலர் ஒன்றியத் தலைவர் க.குணசிங்கம் உட்பட வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களின் ஈபிஆர்எல்எவ்பிரமுகர்களும் ஏனையதமிழ்அரசியல்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தியாகிகளின்உறவினர்களும் நிகழ்வில்கலந்துகொண்டனர்.

நிகழ்வின் தொடக்கத்தில் பத்மநாபாவின் திரு உருவப் படத்துக்கு உறவுகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டு இரு நிமிட அமைதி வணக்கமும் செலுத்தப்பட்டது. நிகழ்வில் தொடர்ந்துபேசிய செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்ததாவது: தோழர் பத்மநாபா தமிழ் மக்களின் விடிவுக்காக தமது 39ஆவது வயதிலேயே எமது ஈபிஆர்எல்எவ்பேரியகத்தைக் கட்டியெழுப்பினார். இதன் மூலம் தமிழ் மக்களின் எதிர் கால நலனுக்காகத் தீர்க்க தரிசனமான முடிவுகளை



காலைக்கதிர் Kalaikkathir

# ரெஜினோல்ட் குரே இறக்கவில்லை படுகொலை செய்யப்பட்டுள்ளார்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சந்தேகம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரெஜினோல்ட் குரே உயிரிழக்கவில்லை. அவர் கொலைசெய்யப்பட்டுள்ளார். இதனைத் தெரிவிப்பதற்கு நான் அச்சப் படப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான லரின் பெரேரா, ரெஜினோல்ட் குரே, புத்திக குருகுலரத்ன மற்றும் முத்து சிவலிங்கம் ஆகியோர் மீதான அனுதாபப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரெஜினோல்ட் குரே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இருந்த சிறந்த தலைவர். அவர் சிறந்த அறிவார்ந்தவர்.

அனைவருடனும் அன்பாக பழகக்கூடியவர். அதனால் அவரை நான் வடக்கு ஆளுநராகவும் பின்னர் மாணிக்ககல் கூட்டுத்தாபன தலைவராகவும் நியமித்தேன். அதேபோன்று அவர் அரசியல் துறையில் அமைச்சு பதவி உட்பட பல்வேறு பதவிகளை வகித்து வந்தார்.

அத்துடன் ரெஜினோல்ட் குரே மரணித்தார் என நான் நம்ப மாட்டேன். அவர் தனது உயிரை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்காக அர்ப்பணித்தார் என்றே தெரிவிக்கிறேன். அவரின் மரணம் தொடர்பில் நான் அறிந்த மட்டில் விசாரணை ஒன்று இடம்பெறவில்லை. என்றாலும் ஒருவகையில் அது கொலை. அவர் மரணித்தார் என்பதைவிட



அவரைப் படுகொலைசெய்தார்கள் எனத் தெரிவிப்பதற்கு நான் அச்சப் படப்போபவனல்லன்.

ஏனெனில் கடந்த மாகாணசபை தேர்தலுக்காக வேட்புமனு கோரிய கட்டத்திலே அவருக்கு இருதய நோய் ஏற்பட்டு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு ஒரு வார காலத்துக்குள்தான் களுத்துறை மாவட்டத்துக்காக வேட்பாளர் தெரிவு கலந்துரையாடலுக்கு கலந்துகொள்ள சென்றிருந்தார். அவர் இந்த கலந்துரையாடலுக்கு செல்லும்போது, என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு அங்கு செல்வதாகத் தெரிவித்தார். அங்கு செல்லவேண்டாம் ஏனெனில் பல கட்சிகள் இணைந்து வேட்பாளர்கள் தெரிவு இடம்பெறுவதால், அங்கு வாக்கு-வாதங்கள் இடம்பெறும். அதனால் சுகவீனமுற்றிருக்கும் நீங்கள் அங்கு செல்ல வேண்டாம் என நான் அவருக்கு கூறினேன் என்றாலும் அவர் அந்தக் கூட்டத்துக்குச் சென்றிருந்தார்.


என்றாலும் அந்த கலந்துரையாடலின்போது ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான வார்த்தைப் பிரயோகங்களால் அவர் பாரிய மன அழுத்தத்துக்கு, மன வேதனைக்கு ஆளாகி இருந்தார். அவர் ஒரு வாரத்துக்கு முன்னர் சத்திரசிகிச்சைக்கு உட்பட்டிருந்தமையால், அந்த கலந்துரையாடலில் அவருக்கு எதிராக பேசப்பட்ட விடயங்களை அவரால் தாங்கிக்கொள்ள முடியாமல் போனது.

அதனால் அவர் அந்தக் கலந்துரையாடலில் இருந்து வெளியேறி என்னை தொடர்புகொண்டு இடம்பெற்ற விடயங்களைத் தெரிவித்தார். என்றாலும் அவருக்கு நான் ஆறுதல் தெரிவித்து, வீட்டுக்கு சென்று ஓய்வாக இருக்குமாறு தெரிவித்தேன். பின்னர் சில தினங்களில் அவர் மீண்டும் நோய்வாய்ப்பட்டு மரணித்தார்.

அதனால் அவரின் மரணம் தொடர்பில் எந்த விசாரணையும் இடம்பெறாமை மிகவும் பேரழிவாகவே நான் கருதுகிறேன். - என்றார். (05)

# தகுதி இருந்தும் நிவாரணப் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் முறையிடலாம்

## பிரதமர் சபையில் தெரிவிப்பு



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தில் முன்னொருபோதும் இல்லாத வகையில் இம்முறை பெருமளவானவர்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. அத்துடன் தகைமையானவர்கள் சிலரின் பெயர்கள் இந்த நிவாரணப் பட்டியலில் இடம்பெறவில்லை என்றால் அவர்கள் அதற்காக மேன்முறையீடுசெய்ய முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் அரசாங்கத்தின் அஸ்வெசும நிவாரண வேலைத்திட்டம் தொடர்பில் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே. பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களுக்கான அரசாங்கத்தின் அஸ்வெசும நிவாரணத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான மதிப்பீடு தொடர்பில் சபையில் பலரும் கருத்துக்களை முன்வைத்தனர்.

அந்த வகையில், கடந்த மாதத்தில் இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட சில அதிகாரிகள் சமுகமளிக்காததன் காரணத்தால் தகைமைகளைக் கொண்ட இளைஞர்கள் சிலரை சுயாதீனமாக சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கிணங்க நலன்புரி சபை அந்த சவாலை பொறுப்பேற்று முதலாவது சுற்றை எமது அரச உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி நாடளாவிய ரீதியில் மேற்கொண்டுள்ளது.

கடந்த வரவு - செலவுத் திட்டத்திலும், நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை பாதுகாப்பதற்கான இந்தத் திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதேபோன்று அதனை மேலும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மதிப்பீடுகளில் குறைபாடுகள் காணப்படுமாயின் வசதி படைத்தவர்களுக்கும் இந்த நிவாரணத்தைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். எவ்வாறாயினும் வசதி படைத்தவர்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட முடியாது.

தகைமையானவர்கள் சிலரின் பெயர்கள் இந்த நிவாரணப் பட்டியலில் இடம்பெறவில்லை என க் கூறப்படும் போதும் அவர்கள் அதற்காக மேன்முறையீடு செய்ய முடியும். மேன்முறையீடுகளுக்கான காலம் இன்னும் நிறைவடையவில்லை. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குள், பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் ஆகியோரை எந்த விதத்திலும் இந்தத் திட்டத்திலிருந்து நீக்க முடியாது. அதனால், அதற்கான மேன்முறையீ-டுகளைச் சமர்ப்பிக்கும் காலம் இன்னும் நிறைவடையவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பிரச்சினைகள் உள்ளவர்கள் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எவ்வாறெனினும் முன்னொருபோதும் இல்லாத வகையில் இம்முறை பெரும்பாலானவர்களுக்கு இந்த நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. அதற்காக சர்வதேச நாடுகளிலிருந்து கிடைக்கின்ற ஒத்துழைப்புக்களை மேலும் அதிகமாக எமக்கு பெற்றுக் கொள்ளவும் முடியுமாகும் என நாங்கள் நம்புகிறோம். - என்றார். (05)

# எனது வீடு எரிக்கப்பட்ட மறுநாள் நான் பிரதமர் பதவியை இராஜினாமா செய்யவேண்டும் என்ற அழுத்தம் தரப்பட்டது

## ஜனாதிபதி சர்ச்சை தகவல்




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வீடும் நூலகமும் எரிக்கப்பட்ட மறுதினம் தன்னை பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் அரகலயவிற்கு பின்னர் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் தொடர்பான எதிர்பாராத நிகழ்வுகளில் ஒரு பகுதியாக தனது வீடு எரிக்கப்பட்ட மறுநாள் தன்னை பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றினால் தூண்டப்பட்டவர்களே தனது வீட்டுக்குத் தீமூட்டினார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கருத்தை அரகலய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆட்சிமாற்றம் குறித்துமிகவும் தீவிரமாக காணப்பட்ட ஒரு தருணத்தில் பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழுத்தம் கொடுத்தது யார் என்ற சர்ச்சை மூண்டுள்ளது.

அரசமைப்பிற்கு ஏற்ப சபாநாயகர் தலைமை பொறுப்பை ஏற்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

லண்டனில் சர்வதேச ஜனநாயக சங்கத்தின் 40 வருடபூர்த்தியை குறிக்கும் விதத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அக்காலப்பகுதியில் பல சர்வதேச தலையீ-டுகள் காணப்பட்டன என நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ஸ நூலொன்றில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டுள்ள நிலையிலேயே ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

அவ்வேளை ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ தனது உயிரைக்காப்பாற்றிக்கொள்ள ஓட்டமெடுத்த தருணத்தில் அமெரிக்க இந்திய தூதுவர்கள் பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்குமாறு கேட்டுக்கொண்டனர் என விமல்வீரவன்ஸ தெரிவித்திருந்தார். அவ்வேளை ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனெரத் இரண்டு கடிதங்களை அனுப்பியிருந்தார். ஆனால் கோட்டாபய தனது இராஜினாமா கடிதத்தில் மாத்திரம் கையெழுத்திட்டார்.

இதன் காரணமாக அமெரிக்க தூதுவர் ஜூலிசங் சபாநாயகரை அழைத்து அவர் தலைமை பொறுப்பை ஏற்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார் எனவும் விமல்வீரவன்ஸ தெரிவித்திருந்தார். எனினும் சபாநாயகர் அதனை ஏற்கமறுத்து பிரதமர் பொறுப்பை ஏற்பார் எனக் குறிப்பிட்டிருந்தார் எனவும் விமல்வீரவன்ஸ தெரிவித்திருந்தார்.

புத்தகத்தில் முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை அமெரிக்க தூதுவர் நிராகரித்திருந்தார்.

ஜனாதிபதி லண்டனில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் மூலம் விமல்வீரவன்ஸ தனது நூலில் தெரிவித்த விடயங்களை உறுதிசெய்-துள்ளாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களில் பெருமளவானவர்களை கொழும்பிற்கு கொண்டுவந்து ஜனாதிபதியின் இல்லத்திற்குள் வெற்றிகரமாக நுழைந்தனர். இதன் காரணமாக கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக் கடற்படையின் கப்பலில் தப்பிச்சென்றார். அன்று மதியம் ஒன்றுகூடிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் நான் ஜனாதிபதி பொறுப்பை ஏற்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனினும் நான் பதவி விலகவேண்டும் என எதிர்கட்சிகள் வலியுறுத்தின.

ஆனால் நான் உறுதியாக இருந்தேன். அதனை ஏற்கமறுத்தேன். அரசமைப்பின்படி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவர் ஒருவர் பதவி யேற்கவேண்டும் அதன் பின்னர் நான் பதவி விலகுவேன் எனத் தெரிவித்தேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சில ஊடக நிறுவனங்களால் உந்தப்பட்டவர்கள் எனது வீட்டுக்குத் தீமூட்டினார்கள். நான் அதனால் பதவி விலகுவேன் எனக்கருதினார்கள். ஆனால் நான் உறுதியாக இருந்தேன். அடிபணிய மறுத்தேன்.

மறுநாள் நான் பதவி விலகவேண்டும் என்ற வேண்டுகோள் வெளியானது. சிலர் சபாநாயகர் பதவி யேற்கவேண்டும் எனத் தெரிவித்தனர். நான் எனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து பதவியிலிருந்து விலகமறுத்தேன். - எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (05)

# கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் உயர் கல்விப் பூர்த்திக்கு சிறந்த நிறுவனம்

## பாதுகாப்பு செயலாளர் கமல் பெருமிதம்



கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் தொடக்கத்தில் இருந்து புகழ்பெற்ற பல்கலைக்கழகமாக மாறியுள்ளதுடன், கல்வி மற்றும் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவதைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றுள்ளது என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களின் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஜெனரல் குணரத்ன உள்ளூர் மற்றும் சர்வதேச தரவரிசையில் மேலும் உயர் நிலைக்கு கொண்டுவந்த இப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் மற்றும் கல்வி நிர்வாக ஊழியர்களின் சேவைகளைப் பாராட்டினார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக நிர்வாக சபையின் தற்போதைய தலைவராக ஜெனரல் குணரத்ன செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான 51 வாகனங்கள் தொடர்பில் தகவலில்லை

## தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவிப்பு

*தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டு இறுதி வரை ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான 51 வாகனங்கள் தொடர்பில் எந்தத் தகவலையும் கண்டுபிடிக்க முடியவில்லை எனத் தெரிவித்துள்ளது.*

*இதன் காரணமாக இந்த வாகனங்களின் பெறுமதியையும் நிர்ணயிக்க முடியாதுள்ளது எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதேவேளை, ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சொந்தமான 53 வாகனங்கள் ஏனைய அரச நிறுவனங்கள், விஹாரைகள், சமயத் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.*

*இவற்றில் 2022ஆம் ஆண்டு 27 வாகனங்களுக்கான பராமரிப்புச் செலவுக்காக அலுவலகம் ஒரு கோடியே 37 லட்சம் ரூபாவை செலவிட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.*

*(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மையான பயனாளிகளை தெரிவு செய்வதில் உள்ள சவால்

சமூகத்தில் நலிந்த தனிநபர்கள் அல்லது குடும்பங்களுக்கான அரச உதவி குறித்த சர்ச்சைகள் எழுந்துள்ளன. அரச உதவியைப் பெறப்போகும் புதிய பயனாளிகள் தொடர்பான முதல் கட்டப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் பல இடங்களிலும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மக்கள் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்தியுள்ளனர்.

அப்படிப் பாதிக்கப்பட்டவர்கள் என்று கருதுவோர் மற்றும் உண்மையில் உதவி தேவைப்படுவோர் மேன்முறையீடு செய்ய முடியும் என்று ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். ஆடி 10 வரை அதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கில் இது தொடர்பில் கருத்துரைத்துள்ள ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான திலீபன், தவறுகளுக்கு அரச அதிகாரிகள்தான் காரணம் என்று பழியைத் தூக்கி அவர்கள் மீது போட்டுள்ளார்.

இது ஒரு சிக்கலான விடயம்தான். ஏற்கனவே சமுர்த்தி உதவி பெற்றவர்கள் இருக்கையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நலிவடைந்தவர்களையும் உள்ளடக்கிய புதிய பட்டியல் தயாரிக்கப்படவேண்டும். எனினும் பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் அறிவுறுத்தல்படி உண்மையில் உதவி தேவையானவர்களுக்கே அவை வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த உண்மையான பயனாளிகளைத் தேர்வு செய்வதுதான் எப்போதுமே பிரச்சினைக்குரியதாக இருக்கின்றது.

அது தொடர்பான அரசின் தெரிவு முறை, அணுகுமுறை இன்னும் கூர்மைப்படுத்தப்படவேண்டியிருக்கின்றது. ஏனெனில் சமுர்த்தி உதவித் திட்டத்தின் கீழேயேகூட வசதி, வாய்ப்பு உள்ளவர்கள் பலர் அந்த உதவிகளைப் பெற்றுவந்தார்கள் என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு. அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் அனுசரணை காரணமாக இவ்வாறு பொருளாதார வசதி உள்ளவர்களும் சமுர்த்தி உதவியைப் பெற்றுவந்தார்கள். சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டவர்கள், வாகனங்கள் வைத்து வருமானம் பெற்றவர்கள் மாடி வீடுகளை உடமையில் கொண்டவர்கள் என்று பலரும் இத்தகைய அரச உதவியைப் பெறுபவர்களாக இருந்தனர்.

இந்தத் தரப்பினரும் தற்போது பொருளாதார ரீதியில் நலிவடைந்துள்ளனர் என்பபதை மறுக்க முடியாது. அதேநேரம் நலிவடைந்த சமூகத்தினர் மேலும் நலிவடைந்து சென்றிருக்கக்கூடிய நிலையும் காணப்படுகின்றது. குறிப்பாகத் தனிநபர்களாக இருப்பவர்கள் உதவி மற்றும் வருமானம் இன்றி மேலும் கடைநிலைக்குச் சென்றுள்ளனர். இவற்றையெல்லாம் சீர் தூக்கிப் பார்த்து, நுண்ணறிவுடன் பயனாளிகளைத் தெரிவு செய்யக்கூடிய முறையும் பக்குவமும் தற்போதுள்ள பொறிமுறையில் இல்லை. அது தட்டையான ஒரு தெரிவு முறையாக மட்டுமே உள்ளது.

உதாரணத்திற்கு கல்வீடு இருப்பவருக்கு இத்தகைய உதவி கிட்டாது என்பது ஒரு தெரிவு முறையாக இருந்தால், கல்வீடு இருப்பவரும்கூட இப்போது வருமானம் இன்றி வறுமைக்குள் தள்ளப்பட்டிருக்க வாய்ப்புக்கள் அதிகமுண்டு. தன் வறுமைக்காக அவர் உடனடியாக வீட்டை விற்றுவிடவும் முடியாது. இத்தகைய நிலையில் தற்போதைய பொறிமுறையில் அவர் உண்மைப் பயனாளி இல்லை என்றே கருதப்படுவார். அதேநேரம் அத்தகைய கல்வீடு இருக்கும் ஒருவருக்கு உண்மையான தேவை இருக்கிறது என்று கணித்து உதவி வழங்கப்படும்போது வீடே இல்லாத ஆனால் வருமானத்திற்கு வழி இருக்கக்கூடியவர்கள் அதனை எதிர்ப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு.

எனவேதான் உணர்திறனும் நுண்திறனும் மிக்க ஒரு தெரிவு முறை இந்த விடயத்தில் பின்பற்றப்படவேண்டியது மிக முக்கியமாக இருக்கின்றது. எல்லா மட்டங்களிலும் ஊழலும் தலைவிரித்தாடும் நிலையில், உண்மைப் பயனாளிகள் தெரிவு என்பது பெரும் சவால் மிக்க பணிதான். ஆனால், உதவி தேவைப்படுவோருக்கு அது கிடைக்காமல் போகக்கூடாது என்பதை மனதிருத்தி தெரிவுப் பணியைக் கூர்மைப்படுத்தவேண்டியது ஆளும் தரப்பின் கட்டாயப் பணியாகும். ஏற்கனவே இருக்கும் தரவுகளை மட்டும் பயன்படுத்துவதைவிட புதிய தரவு சேகரிப்பும் இந்தப் பணியைக் கூர்மைப்படுத்த உதவும்.

ஆடி மாதம் முதல் இந்த உதவியைப் பெற முடியும் என்று அரசு அறிவித்திருக்கின்றது. எனினும் பாதிக்கப்பட்டவர்கள் விடயத்தில் அவசரப்படாமல், நிதானமாக ஆராய்ந்து உண்மையான தேவையுள்ள அனைவருக்கும் உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதும் அவசியம் என்பதுடன் ஏமாற்று, மோசடிகளைச் செய்து உதவியைப் பெற்றவர்களைத் தண்டிப்பதும் அதேயளவிற்கு அவசியம் என்பதையும் ஆளும் தரப்பு மனங்கொள்ளவேண்டும். அப்போதுதான் உண்மையான பயனாளிகளுக்கு மட்டும் உதவிகள் கிடைப்பதை உறுதி செய்யமுடியும்.




# அற்ப ஆயுசில் முடிந்த ரஷ்யக் கிளர்ச்சி

**தேபிந்த்**

ரஷ்யாவில் கூலிப் படையினர் திடீர் கிளர்ச்சியை அறிவித்ததை அடுத்து ஏற்பட்ட உள்நாட்டுப் போர்ப் பதற்றம் சனிக்கிழமை இரவே ஒரு முற்றுப்புள்ளிக்கு வந்துள்ளது. ரஷ்ய அதிபர் புதினின் நெருங்கிய நண்பரான பெலாரஸ் அதிபரின் முயற்சியினால் இரு தரப்பினருக்கும் இடையில் ஓர் இணக்கம் எட்டப்பட்டு பிரச்சினை முடித்து வைக்கப்பட்டது. அதையடுத்து ரஷ்யாவில் அமைதி திரும்பியுள்ளது. எனினும் இன்று திங்கட்கிழமை அங்கு வேலை அற்ற நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. நிலமைகள் தணியும் வரை மக்களை வீடுகளுக்கு வெளியே தேவையற்ற வகையில் நடமாடவேண்டாம் என்று அதிகாரிகள் கேட்டுள்ளனர்.



### என்ன நடந்தது?

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. அதிபர் புதினின் இந்த நடவடிக்கைக்கு, உள்நாட்டிலேயே எதிர்ப்பு இருந்தது. எனினும், அதனை அலட்சியப்படுத்தி ஓராண்டுக்கும் மேலாக போர் தொடர்கிறது.

ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து, அந்த நாட்டின் தனியார் பாதுகாப்பு அமைப்பான வாக்னர் ஆயுதக் குழுவும் போரில் ஈடுபட்டது. இந்தக் குழு தன்னைத் தனியார் இராணுவம் என்றே அழைக்கிறது. அந்தக் குழுவின் தலைவர் ஈவ்ஜெனி பிரிகோஸின் (62), அதிபர் புதினின் முன்னாள் நெருங்கிய நண்பர். ரஷ்ய அதிபர் மாளிகையான கிரெம்ளினின் சமையல் ஒப்பந்தங்களைப் பெற்றவர் என்பதால் ஒரு காலத்தில் இவர் புதினின் சமையல்காரர் என்று அழைக்கப்பட்டவர்.

உக்ரைன் போரில் சில முக்கிய இடங்களைக் கைப்பற்றுவதற்கு இந்த வாக்னர் படையினர் மிகமுக்கிய பங்காற்றியுள்ளனர். அந்தக் கூலிப் படையில் 50 ஆயிரம் படையினர் இருந்தனர் என்றும் அவர்களில் 20 ஆயிரம் பேர் உக்ரைன் போரில் உயிரிழந்துவிட்டனர் என்றும் கூறப்படுகின்றது. அவர்கள் போரில் ஆற்றிய பணிக்காக ரஷ்யப் படையினரால் பாராட்டப்பட்டுள்ளனர்.

ஆனால், இடையில் ஈவ்ஜெனி பிரிகோஸினுக்கும், ரஷ்ய ராணுவ அமைச்சர் செர்கே ரேய்கு மற்றும் ரஷ்யத் ராணுவத் தளபதி வாலரி ஜெரசிமோவுக்கும் இடையே திடீரென கருத்து மோதல் ஏற்பட்டது. வாக்னர் ஆயுதக் குழுவினர் மீதான ரஷ்யப் படைகளின் கட்டுப்பாட்டை அதிகரிக்கவேண்டும் என்று அவர்கள் இருவரும் விரும்பியமையே இதற்கான காரணம் என்று சொல்லப்படுகின்றது.

வாக்னர் ஆயுதக் குழு அதிகாரப் பூர்வமாக ரஷ்ய ராணுவத்தில் இணைய வேண்டும் என்று தலைமை தளபதி வாலரி ஜெரசிமோவ் உத்தரவிட்டார். இந்த உத்தரவை ஈவ்ஜெனி பிரிகோஸின் ஏற்கவில்லை. இதனால், வாக்னர் ஆயுதக் குழுவுக்குத் தேவையான ஆயுதங்களை வழங்க ரஷ்ய ராணுவம் மறுத்தது.

இதற்கிடையில், உக்ரைனில் ரஷ்ய வீரர்கள் முகாமிட்டிருக்கும் இடங்களின் விவரங்களை எதிரிகளுக்கு ஈவ்ஜெனி பிரிகோஸின் வழங்கியதாக, ரஷ்ய ராணுவ வட்டாரங்கள் குற்றம் சாட்டின. இதன் காரணமாக, உக்ரைனின் பாக்மத் பகுதியில் முகாமிட்டிருந்த வாக்னர் ஆயுதக் குழு வீரர்கள் மீது, ரஷ்ய ராணுவம் அண்மையில் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் பலர் உயிரிழந்தனர்.

இந்த முரண்பாடுதான் வாக்னர் கூலிப் படையினரை தலைநகர் மாஸ்கோ நோக்கி கிளர்ச்சிப் பயணத்தைத் தொடக்க வழிவகுத்தது. இந்தக் கிளர்ச்சியை அறிவித்தபோதே, இது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முனைப்பு அல்ல, நீதிக்கான பயணம் என்று வாக்னர் படைத் தலைவர் அறிவித்திருந்தார்.

### திடீர் கிளர்ச்சி

இந்தப் பின்னணியில், ரஷ்யாவின் ரோஸ்டோவ் நகரில் செயல்பட்ட ரஷ்ய ராணுவக் கட்டுப்பாட்டு மையத்தை வாக்னர் ஆயுதக் குழு சனிக்கிழமை திடீரெனக் கைப்பற்றியது. அங்கிருந்தே உக்ரைன் போருக்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அந்த நகரம் முழுவதையும் தற்போது வாக்னர் ஆயுதக் குழு தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது..

இது தொடர்பாக ஆயுதக் குழு தலைவர் ஈவ்ஜெனி பிரிகோஸின் டெலகிராம் செயலியில் வெளியிட்ட பதிவில், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கே ரேய்கு மற்றும் ராணுவ தளபதி வாலரி ஜெரசிமோவ் ஆகியோர்தான், உக்ரைனுக்கு எதிரானப் போருக்கு காரணம். இவர்கள் இருவரும் ரோஸ்டோவ் நகரில் என்னை வந்து சந்திக்க வேண்டும். இருவரும் பதவி விலக வேண்டும். எங்களது வீரர்கள் இங்கிருந்து தலைநகர் மொஸ்கோ நோக்கி முன்னேறுவார்கள். குறுக்கே யாராவது வந்தால், அவர்களை அழித்துவிடுவோம் என எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதையடுத்து, தலைநர் மொஸ்கோவில் அதிபர் மாளிகை உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் அனைத்து பாதுகாப்பு அமைப்புகளும் புதினுடன் தொடர்பில் இருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதாக அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

அதிபர் விளாடிமிர் புதின் தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

ரஷ்ய மக்களின் வாழ்வுக்காகவும், அவர்களின் பாதுகாப்பு, இறையாண்மைக்காகவும் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். நாட்டு மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய இந்தப் போரில், அனைத்து படைப் பிரிவுகளும் இணைந்து, ஒற்றுமையாக செயல்பட வேண்டியது அவசியம்.

இந்த தருணத்தில், நமது ஒருமைப்பாட்டை சீர்குலைக்க சிலர் முயற்சித்து வருகின்றனர். இது நாட்டு மக்களுக்கும், போரில் ஈடுபடும் வீரர்களுக்கும் செய்யும் துரோகமாகும். மேலும், மக்களின் முதுகில் குத்தும் செயலாகவும் இருக்கும்.

நாட்டு நலனுக்கு எதிராக செயல்படுவோர், ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியைத் தொடங்கியவர்கள், அச்சுறுத்தல் மற்றும் தீவிரவாதப் பாதையில் சென்றவர்கள் அனைவரும் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் - என்று தெரிவித்தார்.

இதற்கிடையில், வாக்னர் ஆயுதக் குழுவின் டெலிகிராம் சேனல் வெளியிட்ட செய்தியில், அதிபர் விளாடிமிர் புதின் தவறான முடிவை எடுத்துவிட்டார். அதற்கான மோசமான விளைவுகளை அவர் சந்திப்பார். ரஷ்யாவில் விரைவில் புதிய அதிபர் பதவியேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினால் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட வாக்னர் ஆயுதக் குழு திடீரெனக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளதால், புதின் அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

### யார் இந்த ஈவ்ஜெனி பிரிகோஸின்?

ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் 1961இல் பிறந்தவர் ஈவ்ஜெனி பிரிகோஸின்(62). சிறுவயதில் சீர்திருத்தப் பள்ளியில் இருந்தார். விடுதலையான பிறகு, உணவகம் திறந்தார். அந்த உணவகத்துக்கு புதின் அடிக்கடி செல்வது வழக்கம். இதில் ஏற்பட்ட நட்பால், அதிபர் மாளிகைக்கு உணவு வழங்கினார். பின்னர், செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகர மேயரானார்.

2014ஈல் வாக்னர் ஆயுதக் குழு என்ற தனியார் ராணுவ ஒப்பந்த அமைப்பைத் தொடங்கினார். லிபியா, மாலி, சிரியா உள்ளிட்ட நாடுகளில் நடந்த உள்நாட்டுப் போரில் அரசுகளுக்கு ஆதரவாக, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியது இந்த அமைப்பு. அந்த வகையில் உக்ரைன் மீதான போரிலும் இந்த அமைப்பு முக்கியப் பங்காற்றி வருகிறது. இக்குழுவில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உள்ளனர்.

இந்நிலையில், உக்ரைன் போரில் தங்கள் வீரர்கள் ஏராளமானோர் கொல்லப்பட்டதற்கு ரஷ்ய ராணுவம்தான் காரணம் என்றும் அவர் குற்றம்சாட்டி வந்தார். இதனால், புதினுக்கும், ஈவ்ஜெனி பிரிகோஸினுக்கும் இடையே பனிப்போர் நிலவி வந்தது.

### அமைதி உடன்படிக்கை



தாம் கட்டுப்பாட்டில் எடுத்த ரோஸ்டோவ் நகரில் இருந்து மொஸ்கோ நோக்கிய பயணத்தை இடைநடுவில் கைவிட்டுத் திரும்பியதாக சனிக்கிழமை இரவு பிரிகோஸின் அறிவித்தார். இரத்தக் களரியை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகத் தமது நடவடிக்கை நிறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார். ஆனால், புதினின் நெருங்கிய நண்பரான பெலாரஸ் அதிபர் இந்த விடயத்தில் தலையிட்டு அமைதி உடன்படிக்கைக்கான இணக்கத்தை ஏற்படுத்தினார்.

அதன்படி பிரிகோஸினுக்கு எதிராகத் தொடக்கப்பட்ட அனைத்துச் சட்ட நடவடிக்கைகளும் கைவிடப்படுவதாக ரஷ்யா அறிவித்துள்ளது. அத்துடன் அவர் பெலாரஸ் தலைநகருக்குச் செல்வதற்கும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். கிளர்ச்சியில் ஈடுபட்ட வாக்னர் படையினர் மீதும் எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணக்கத்தின் அடிப்படையில்தான் கிளர்ச்சி முயற்சி நிறுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டாலும், அதற்கு மேல் எட்டப்பட்ட இணக்கங்கள் என்ன என்பது இதுவரையில் வெளிப்படுத்தப்படவில்லை.

இருந்தாலும் ரஷ்யாவை ஒரே நாளில் ஆட்டம் காண வைத்த கிளர்ச்சி அற்ப ஆயுசில் முடிந்தமையை அடுத்து


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தொண்டாவுக்கு பலர் முதுகில் குத்தியபோது பக்க பலமாக இருந்தவர் முத்து சிவலிங்கம்

## ஜீவன் தொண்டமான் அஞ்சலி



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று பலமாக இருப்பதற்கு அமரர் முத்து சிவலிங்கமும் பிரதான தூணாக இருந்தார். அவர் பதவிகளுக்காக ஆசைப்பட்ட நபர் கிடையாது. அவர் இன்று எம்முடன் இல்லாவிட்டாலும் மலையகம் எப்படி இருக்க வேண்டும் என்ற அவரின் சிந்தனைகளுக்கு நிச்சயம் நாம் உயிர்கொடுப்போம். அத்துடன் அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு முதுகில் குத்திவிட்டு பலர் வெளியேறினாலும் இவர் பக்க பலமாக இருந்தவர் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்களான லரின் பெரேரா, ரெஜினோல்ட் குரே, புத்திக குருகுலரத்ன மற்றும் முத்து சிவலிங்கம் ஆகியோர் மீதான அனுதாபப் பிரேரணையில்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

முத்துசிவலிங்கம் அமைதியான மனிதர்.சேவைமனப்பான்மைகொண்டவர். தான் மட்டும் வளராமல் கட்சியில் உள்ள அனைவரையும் வளர்த்துவிட்ட மா மனிதர் ஆவார்.

நான்சபரிமலைக்குமுதன்முறையாக மாலை அணிந்திருந்தவேளையிலேயே அவர் உயிரிழந்திருந்தார். மாலையை கழற்றி வைத்து விட்டாவது அஞ்சலி செலுத்த செல்வோமா என நினைத்தேன். ஆனால் முதன்முறை என்பதால் அதனை என்னால் செய்ய முடியாமல் போய்விட்டது. ஆனால் அந்த வலி இன்னும் என்னுள் இருந்துகொண்டு இருக்கிறது.

50 வருடகாலத்துக்கு மேலாக மக்களுக்கும், கட்சிக்கும், தொழிற்சங்கத்துக்கும் சேவையாற்றிய அவருக்கு தகுந்த மரியாதை அளிக்கப்பட்டதா என்ற வினாவுக்கான விடை கேள்விக்குறியாகவே இருக்கின்றது. அதுவும் எனக்கு வேதனையைத் தந்தது.

ஒருவர் நம்முடன் இருக்கும்போது அவரின் முக்கியம் தெரியாது. இல்லாமல்போனால்தான் அதன் வலி புரியும். முத்துசிவலிங்கம் போன்ற அரசியல் தலைவரை பார்க்க முடியாது. அவர்போல் ஒருதலைவரை உருவாக்கவும் முடியாது.

குரலை உயர்த்தி பேசுவது தலைமைத்துவம் கிடையாது. நாம் பேசும்போது மற்றயவர்களின் குரல்களை அடங்க வைப்பதுதான் தலைமைத்துவம். அப்படிபட்ட ஒரு தலைவர்தான் முத்துசிவலிங்கம். கட்சிக்காக விசுவாசமாக இருந்தார். மலையகத்தில் அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கியதால் மக்கள் அன்பால் அவருக்கு மின்சார கண்ணா என்றுகூட அழைத்து வந்தனர்.

ஆறுமுகன் தொண்டமானுக்கு தூணாக இருந்தார். முதுகில் குத்திவிட்டு பலர் வெளியேறினாலும் பக்க பலமாக இருந்தார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸைக் கட்டியெழுப்புவதற்கு பக்க பலமாக இருந்தார். கட்சியில் சமரச தூதுவராக செயற்பட்டார். - என்றார். (05)

# டெங்கு ஒழிப்புக்கு அனைவரும் ஒன்றுபட்டு பாடுபடவேண்டும்

## விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம கோரிக்கை

இவ்வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காண முடிவதாகவும் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 47 ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் உடலியல் நோய்கள் தொடர்பிலான விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.

எதிர்வரும் பருவகால மழை வீழ்ச்சியின் போது டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக்கூடும் என்பதால் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்கவேண்டியதன் அவசியத்தையும் வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டினார்.

தற்போது வரையில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவில் டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர் எனவும் அங்குள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு துறையினருடன் இணைந்து கழிவுகளை அகற்றும் விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதாகவும் ஆனந்த விஜேவிக்ரம சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்படும் '101கலந்துரையாடல்' நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாள்களில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் தலையீட்டின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் டெங்கு ஒழிப்புதிட்டத்தை அரச, தனியார் துறைகள் பொதுமக்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

தொடர்ச்சியாக இந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் இயலுமை காணப்படுகின்றது. எதிர்வரும் பருவகாலத்தைத் தொடர்ந்து டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக்கூடும்.

பொதுவாக ஜுலை மாதத் தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பைக் காண முடியும். அந்த வகையில் எதிர்வரும் நாள்களில் நோயாளர்கள் அதிகரிக்கக் கூடும் என்பதால் அனைத்து துறையினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும் எனவும் தெரிவித்தார்.

டெங்கு நோய் எந்த வயதினரையும் பாதிக்கும். பதிவாகும் நோயாளர்களில்75சதவீதமானவர்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள். இதற்கு முன்பாக சிறு பிள்ளைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டாலும் தற்போது இளைஞர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

டெங்குஎன்பதுஒருவகைவைரஸ் ஆகும். டெங்கு நோயாளர்களை டெங்கு நுளம்புகள் கடிக்கும் பட்சத்தில் அந்த நுளம்பால் ஏனையவர்களுக்கு டெங்கு நோய் பரவக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாகும். பரவுவதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கும்.

அதனால் டெங்கு கட்டுபாட்டிற்கு இந்தக்காரணங்கள்பற்றி அவதானம் செலுத்த வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தினார்.

முதலில் நுளம்புகள் பரவக்கூடிய பகுதிகளைத் தூய்மைப்படுத்துவது மிகவும் அவசியமாகும். தூய்மையான நீர் சேரும் பகுதிகளிலேயே டெங்கு நுளம்புகள் தங்கியிருக்கும். பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பிளாஸ்டிக், டயர், பூச்சாடிகள் உள்ளிட்ட பொருள்கள் இருக்கும் இடங்களில் டெங்கு நோய் அதிகரிக்கும்.

முடிந்தளவிற்கு மேற்படி பகுதிகள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவற்றை தூய்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். அதேபோல் நுளம்பு கடியிலிருந்து தப்பிக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

டெங்கு நோய்க்கு இலக்கானவர்கள் மற்றையவர்களுக்கு பரவாமலிருக்கும் வகையில் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்புப் பெற வேண்டியது அவசியமாகும். அதற்காக உடலை முழுமையாக மறைக்கும் உடைகளைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.

நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான பூச்சி விரட்டித் திரவியங்கள் ஊடாகவும் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பு பெற முடியும். எவ்வாறாயினும் இந்த முறைமைகள் 100 சதவீதம் பலன் தருபவை அல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

பிரதேச சபைகள், நகர சபைகள், பொது சுகாதார அதிகாரி கள் உள்ளிட்ட சுகாதார பிரிவுகள், பாதுகாப்பு பிரிவுகளின் பங்களிப்புடன் நுளம்பு பெருகும் இடங்களைத் தூய்மைப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

டெங்கு நோய் அதிகளவில் பரவும் மாகாணங்களை மையப்படுத்திய விசேட வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக நோயாளர்கள் பதிவாகும் கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்களில் எதிர்வரும் வாரங்களில் விசேட வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அப்பகுதிகளில் காணப்படும் கழிவுகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படும். அதற்காக இராணுவத்தின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

நீர் நிரம்பிய பாத்திரங்களில் நீரை அகற்றினாலும் குடம்பிகள் தங்கியிருக்கூடும். எனவே நீர் நிரம்பாத வகையில் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். பொது-வாக ஐந்து அல்லது ஆறு நாள்கள் மாத்திரமே நுளம்புகள் உயிர்வாழும். அதனால் வாராந்தம் சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். நீங்கள் வசிக்கும் பகுதிக்கு அண்மித்த பகுதிகளை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். அதனால் நோய் கட்டுப்பாட்டை ஒருவரால் மாத்திரம் செய்துவிட முடியாது. இந்நாட்டில் அனைவரிதும் ஒத்துழைப்பு அவசியமாகும் என்றும் வலியுறுத்தினார்.

டெங்கு நோய்க்கு இலக்கானவர் எனின் கடினமான வேலைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். ஓய்வெடுக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு இல்லாவிட்டால் நோயின் பாதிப்பு அதிகரிக்கும். காய்ச்சல் ஏற்படும்போது பெரசிடமோல் தவிர்ந்த ஏனைய மருந்துகளை எடுத்துக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். எந்த ஒரு காய்ச்சல் நோயாளிக்கும் வேறு மருந்துகளை வழங்குமாறு வைத்தியர்கள் பரிந்துரைக்கவில்லை. சில நேரங்களில் பெரசிடமோல் மருந்தால் நோய் முழுமையாக குணமடையாமல் இருக்கலாம். அந்த சந்தர்பங்களில் நோயாளர்கள் அச்சப்படவேண்டிய அவசியம் இல்லை. நோய் இருப்பதால் பாரிய பிரச்சினைகள் ஏற்படாது. ஓய்வெடுப்பதால் பிரச்சினைகளை குறைத்துக்கொள்ள முடியும். இளநீர், தேசிக்காய், தோடம்பழம், ஜீவனி உள்ளிட்ட திரவ வகைகளை உட்கொள்வது மிகவும் உகந்தது என்றும் தெரிவித்தார். (05)

# 41 நாடுகளில் 12 லட்சத்துக்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள்

இலங்கைக்கு 41 நாடுகளிலிருந்து 12 லட்சத்துக்கும் அதிகமான வேலை அனுமதிப்பத்திரங்கள் கிடைத்துள்ளன எனத் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். இவ் வருடம் 3 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு திறன்மற்றும்மொழித்திறனை வளர்த்து இலங்கையர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வகையில் செயற்பட்டு வருகின்றதென அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (05)

# காணாமல்போனவர்களின் உறவுகளை பிரிட்டன் எம்.பிக்கள் சந்தித்தனர்

காணாமல் போனவர்களின் உறவினர்களை பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துள்ளனர். சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தனது ருவிட்டர் பதிவில் இதனை தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்து இலங்கையின் மனித புதைகுழிகள் தொடர்பான புதிய அறிக்கையின் பிரதிகளை பெற்றுக்கொண்டனர் என தென்னாபிரிக்காவை தளமாக கொண்ட அமைப்பு தெரிவித்துள்ளது. (05)

# காத்தான்குடியிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலுக்கு கிழக்கு ஆளுநர் வருகை

காத்தான்குடியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சென்று இறை வழிபாட்டில் ஈடுபட்டதுடன், தமிழ்மொழி மொழிபெயர்ப்புடன் கூடிய குர்ஆன் பிரதி பள்ளிவாசல் கதீபினால் வழங்கி வைக்கப்பட்டது.


கிழக்கு ஆளுநர், இறைவனின் அருளே இன்று இப்பள்ளிவாசலை தரிசிக்க கிடைத்தமைக்கு காரணம் எனவும் இதனால் தான் மிகவும் சந்தோம் அடைந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாகிகள், கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் பணிப்பாளர், பிரதேச செயலாளர், காத்தான்குடி நகரசபை செயலாளர், காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு, தங்களது வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் ஆளுநருக்கு தெரிவித்தனர். (05)

# காத்தான்குடியில் பேரீச்சம்பழம் அறுவடையை ஆளுநர் செந்தில் தொண்டமான் தொடக்கினார்







பெரிய காத்தான்குடியில் அழகுபடுத்தும் நோக்கில் நடப்பட்ட பேரீச்சம் பழ இவ்வருட அறுவடை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், முதலாவது அறுவடையை காத்தான்குடி நகரசபை செயலாளரிடம் இருந்து ஆளுநர் பெற்றுக்கொண்டார். இறைவனின் அருளால் விளைச்சல் சிறப்பாக உள்ளதாகவும், பள்ளிவாசல்களுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# மலையக மக்கள் உரிமைகளை வென்றெடுக்க அர்ப்பணிப்புடன் உழைத்தவர் முத்து சிவலிங்கம்

## பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் சபையில் அனுதாபம்

மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் முன்னாள் அமைச்சர் முத்து சிவலிங்கம் என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மலையக மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களிலிருந்துஅவர்களைமீட்டெடுப்பதிலும்சௌமியமூர்த்திதொண்டமான்மற்றும் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரின் தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பலப்படுத்தவும் அவர் அளப்பரிய சேவை செய்துள்ளார் என பிரதமர்தினேஷ்குணவர்தனதெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்களான லரின் பெரேரா, ரெஜினோல்ட் குரே, புத்திக குருகுலரத்ன மற்றும் முத்து சிவலிங்கம் ஆகியோர் மீதான அனுதாபப் பிரேரணையில்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிக்கையில் -

முத்து சிவலிங்கம் 1989 ஆம் ஆண்டு மற்றும் 1994 ஆம் ஆண்டு தேர்தல்களின் போது நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

2000 ஆம் ஆண்டு தேர்தலிலும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பல தடவைகள் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட நிலையில் 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி முதல் 2020 மார்ச் மாதம் வரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பிரதியமைச்சர் மற்றும் அமைச்சராகவும் பல தடவைகள் பதவி வகித்துள்ளார்.

தமது அரசியல் பயணத்தில் மலையக தோட்டத் தொழிலாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள வெற்றிகளுக்காக தமது உழைப்பையும் வியர்வையையும் அர்ப்பணிப்பையும் அவர் வழங்கியுள்ளார். மலையக மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதிலும்சௌமியமூர்த்திதொண்டமான் மற்றும்ஆறுமுகம்தொண்டமான் ஆகியோரின் தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பலப்படுத்தவும் அவர் செய்த சேவை அளப்பரியது. - என்றார்.

எதிர்க்கட்சித்தலைவர்சஜித்பிரேமதாஸ தெரிவிக்கையில்,

மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவந்தவர். முத்துசிவலிங்கத்துக்கு செய்யும் உதவியாக மலைய மக்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளில் இருந்து அவர்களை மீட்பதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். அதேநேரம் மலையக மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் எமது பயணத்துக்கு அன்னாரின் குடும்பத்தினர் எமக்கு பெரும் சக்தியை வழங்கி வருகின்றனர்,

அவரின் இழப்பால் கலையுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது அனுதாபங்களைதெரிவித்துக்கொள்கிறோம். - என்றார். (05)

# தியாகிகள்நினைவுதூபி ஓட்டமாவடியில் திறப்பு




கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஓட்டமாவடி பாலத்துக்கு அருகில் தியாகிகள் நினைவுத் தூபியைத் திறந்துவைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கல்குடா தியாகிகள் நினைவுத்தூபி குழுவினர் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு அல் கிம்மா சமூக சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் மௌலவி எம்.எம்.ஹாரூன் ஸஹ்வி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தின்போது தாய்மண்ணையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்காக கல்குடா முஸ்லிம் பகுதியில் உயிர்நீத்த வீரர்கள், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர்கள், கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பிரதேச கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் நினைவுகூரப்பட்டனர்.

அத்துடன் உயிர் நீத்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில்பொலிஸ்மற்றும்இராணுவ அதிகாரிகள், பிரதேசநலன்விரும்பிகள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

# பந்துல குணவர்த்தன தெரிவித்த கருத்துக்கு ரயில்வே தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

ரயில்வேத்திணைக்களம் இலாபமடைய வேண்டுமாயின் ரயில்வே சேவையை அதிகார சபையாக மாற்றியமைக்க வேண்டும், ரயில்வே சேவை மறுசீரமைக்கப்பட வேண்டும்எனபோக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்ட கருத்துக்கு ரயில் சேவை தொழிற்சங்கத்தினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

ரயில் சேவையை அதிகார சபையாக மாற்றியமைக்கும் போது பொது பயணிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்வார்கள். இலாபமடையும் நோக்கத்துக்காக கட்டணம் சடுதியாக அதிகரிக்கப்படும். ஆகவே, ரயில்வே சேவையை அதிகார சபையாக மாற்றியமைக்கும் போது ஏற்படும் பாதிப்பை அரசாங்கம் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். மக்களின் விருப்பத்துக்கு அமையவே ரயில் சேவை மறுசீரமைக்கப்பட வேண்டும்.- என்றார். ரயில்சேவையில்பல மாற்றங்கள்ஏற்படுத்தவேண்டியுள்ளது. மானியம் இல்லாத காரணத்தால் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, சேவை அதிகார சபையாக ரயில் சேவை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அத்துடன், ரயில்சேவை காலத்துக்கு ஏற்றாற்போல் மறுசீரமைக்கப்படவேண்டும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்ட கருத்துக்கு ரயில் சேவை தொழிற்சங்கத்தினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். ரயில் சேவையைஅதிகாரசபையாக மாற்றியமைத் தால் நடுத்தர மக்கள்பாரியநெருக்கடிகளை எதிர்கொள்வார்கள். பொது போக்குவரத்து சேவையின் கட்டணம்உயர்வடைந்ததால் பெரும்பாலான பொது பயணிகள் தற்போது ரயில் சேவையை பயன்படுத்துகிறார்கள். இவ்வாறான பின்னணியில் ரயில் சேவையைஅதிகாரசபையாக்கினால் பொது பயணிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்வார்கள்.

ரயில் சேவையை அதிகாரசபையால்மாற்றியமைக்கும் போது பொதுபயணிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள், இழக்கப்படும் வரபிரசாதங்கள் ஆகியன தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் அரசாங்கம் மக்களுக்கு அறிவிக்க வேண்டும். மக்களின்விருப்பத்துக்கு அமையவே ரயில் சேவை மறுசீரமைக்கப்படவேண்டும் என தொழிற்சங்கத்தினர் போக்குவரத்து அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளனர். (05)

# சம்மாந்துறையில் 4 பிரிவுகளைக் கொண்ட வைத்தியர் விடுதிக்கு அடிக்கல் நாட்டல்

உலக வங்கியால் அமுல்ப்படுத்தப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிறுவனங்களை வலுப்படுத்தும் பி.எஸ்.எஸ்.பி. செயற்றிட்டத்தின் கீழ் கல்முனைபிராந்தியசுகாதாரசேவைகள் பணிமனையால் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சுமார் 20 மில்லியன் ரூபா செலவில் வைத்திய உத்தியோகஸ்தர்களுக்கானதங்குமிடகட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் இந்தக் கட்டடத்துக்கான கல் நாட்டும் விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஆசாத் எம் ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார். அத்துடன் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.ஏ வாஜித், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம் மாஹீர், கிழக்கு மாகாண சுகாதார திணைக்களப் பொறியியலாளர் ஏ.எம்.எம்.ஹக்கீம் உள்ளிட்ட முக்கிய அதிதிகளும் கலந்து கொண்டு கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் விழாவில் பங்குபற்றி இருந்தனர்.

குறித்த கட்டடத்தை மூன்று மாத காலத்துக்குள் முடிப்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும்இதுதொடர்பில் ஒப்பந்தக்காரர்களுடன்கலந்துரையாடியுள்ளதாகவும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பிராந்திய பணிப்பாளர் தெரிவித்தார்.

மேற்படிகட்டடம்நிவர்த்திசெய்யும் பட்சத்தில்வெளிமாவட்டங்களில்இருந்து வருகை தருகின்ற வைத்தியர்கள் மற்றும் வைத்திய நிபுணர்களின் தங்குமிட தேவையை ஓரளவு நிவர்த்திக்க முடியும்என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நிகழ்வின் இறுதியாக விடுதிகளுக்கு சமுகமளித்த குறித்த குழுவினர் உத்தியோகத்தர்களிடம் குறைநிறைகளை கேட்டறிந்துகொண்டதுடன் குறைகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தனர். (05)

# சட்டத்தரணியைக் கத்தியால் குத்திய முன்னாள் இராணுவச் சிப்பாய் கைது

பெண் சட்டத்தரணி ஒருவரை கத்தியால் குத்திய முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய முன்னாள் இராணுவ வீரர் என பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலுக்குபயன்படுத்தப்பட்ட கத்தி கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# பொகவந்தலாவையில் இளைஞர் மீது தாக்குதல் சுயாதீன விசாரணை கோருகின்றார் ஜீவன்!





பொகவந்தாலாவநகரில்கைதுசெய்யும் போர்வையில்இளைஞர்ஒருவர்மீதுபொலிஸார் நடத்தியுள்ள தாக்குதலை வன்மையாகக்கண்டித்துள்ளஇலங்கைதொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு எதிராகவும் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார். திடீரென பொகவந்தலாவ நகரில் சனிக்கிழமை களமிறங்கிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளையும் சம்பவ இடத்துக்கு அழைத்தார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் தரப்பில் உள்ள நியாயத்தை அதிகாரிகளுக்கு எடுத்துரைத்த ஜீவன் தொண்டமான், இது விடயத்தில் சில பொலிஸ் அதிகாரிகள் தமது அதிகார எல்லையை மீறும் வகையில் செயற்பட்டுள்ளனர்எனவும்சுட்டிக்காட்டினார்.

இளைஞரை கைது செய்த பொலிஸார் செயற்பட்ட விதம் தொடர்பில் விசாரித்து அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதே பொலிஸார் பொறுப்பாகும். மாறாக சட்டத்தைகையில்எடுத்துசெயற்படுவதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது எனவும் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளிடம் ஜீவன் தொண்டமான் இடித்துரைத்தார்.

பொகவந்தலாவ நகரில் அமைந்துள்ள அரச வங்கியொன்றுக்கு சென்ற வாடிக்கையாளர் ஒருவருக்கும் வங்கி முகாமையாளருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

வங்கி முகாமையாளரின் அறிவிப்பை அடுத்து பொகவந்தலாவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த இடத்திற்கு சென்று சந்தேக நபரைக் கைதுசெய்ய முற்பட்ட போது அங்கு கூடியிருந்தவர்கள் கடும்எதிர்ப்புவெளியிட்டனர். பொலிஸாரும் தான்தோன்றித்தனமாக செயற்பட்டனர் என விமர்சனம் எழுந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை மனிதப்புதைகுழி அகழ்வின்போது சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுப்புக!

## சர்வதேச நாடுகளிடம் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்து

இலங்கையில் மனிதப்புதைகுழிகள் அகழ்வு செய்யப்படும்போது அங்கு சர்வதேச கண்காணிப்பாளர்கள் அனுப்பி வைக்கப்படவேண்டுமென பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்நாட்டு அரசாங்கத்திடமும் ஏனைய சர்வதேச நாடுகளிடமும் வலியுறுத்தியுள்ளனர்.

சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம், இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள், காணாமல்போனோர்குடும்பஒன்றியம்மற்றும்மனிதஉரிமைகள்மற்றும்அபிவிருத்தி நிலையம் ஆகிய 4 அமைப்புக்களும் ஒன்றிணைந்து 'இலங்கையிலுள்ள பாரிய மனிதப்புதைகுழிகளும், வெற்றியடையாத அகழ்வுப்பணிகளும்' என்ற தலைப்பில் விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் செம்மணி, மாத்தளை, மன்னார், சூரியகந்த உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள மனித புதைகுழிகள் தொடர்பாகவும் அவற்றை அகழ்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் தடைகள் என்பன பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக மாத்தளை மனிதப்புதைகுழி அகழ்வின் போது முன்னாள் பாதுகாப்பு செயலாளரும்ஜனாதிபதியுமானகோட்டாபய ராஜபக்ஷவால்மேற்கொள்ளப்பட்டதலையீடுகள்தொடர்பாகஅதிர்ச்சியூட்டும்தகவல்கள் அந்தஅறிக்கையில்உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் அந்த அறிக்கையை மேற்கோள்காட்டி தமது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கங்களில் செய்திருக்கும் பதிவுகளிலேயே பிரித்தானியபாராளுமன்றஉறுப்பினர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

அதன்படி, இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல் மூலம் தமது அன்பிற்குரியவர்களை தொலைத்த பல தமிழர்கள் பிரித்தானியாவில் வாழ்வதாக சுட்டிக்காட்டியிருக்கும் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மெக்டொனாக், 'இலங்கையில் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் முறையான ஆதார சேகரிப்பு இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு நாம் சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுப்பிவைக்க வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார். அதேபோன்று பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் விரேந்திரஷர்மாவும் மேற்குறிப்பிட்டவாறான வலியுறுத்தலை செய்திருக்கின்றார். 'இலங்கையில் இடம்பெற்ற வலிந்துகாணாமலாக்கப்படலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுடனான எமது ஒருமைப்பாட்டைவெளிப்படுத்துகின்றோம். இலங்கையில்மனிதப்புதைகுழிஅகழ்வின் போது சர்வதேச கண்காணிப்பாளர்கள் அங்கு பிரசன்னமாவதை உறுதிப்படுத்துமாறு எமது அரசாங்கத்திடமும், ஏனைய சர்வதேசநாடுகளிடமும் கோருகின்றோம். உண்மையை அறிந்துகொள்வதற்கான உரிமை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உள்ளது ' என்று அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (05)

# வறுமை நிலையிலுள்ள 70 லட்சம் மக்களையும் அஸ்வெசும திட்டத்தினுள் உள்வாங்கவேண்டும்

## சஜித் வலியுறுத்து



நாட்டில் 70 லட்சம் மக்கள் வறுமை நிலையில் உள்ளனர். அவர்கள் அனைவரும் அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும்.

எந்தத் தரவுகளின் அடிப்படையில் வெறுமனே 12 லட்சம் மக்களை மாத்திரம் இந்தத் திட்டத்தில் உள்வாங்க அரசாங்கம் தீர்மானித்தது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

தனது விசேட அறிக்கையொன்றின் ஊடாக இவ்வாறு கேள்வியை முன்வைத்துள்ள எதிர்க்கட்சி தலைவர், அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

நாட்டில் 14 சதவீதமாக இருந்த வறுமை நிலை 31 சதவீதமாக அதிகரித்துள்ளது. மருந்து பற்றாக்குறையால் இலங்கை தற்போது மிக மோசமான சுகா தார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.

மருந்துக்கானபற்றாக்குறை, மருந்தின் விலை உயர்வின் ஊடான மோசடி, ஊழல் என எல்லாவற்றையும் கருத்தில் கொள்ளும்போது, ஒட்டுமொத்தஅரசாங்கமும்இந்நாட்டின் நோய்வாய்ப்பட்ட மக்களின் வாழ்க்கையுடன் விளையாடிக்கொண்டிருக்கிறது.

நாட்டில் நிலவும் உண்மை நிலைவரத்தை புரிந்துகொள்ள ஒரு வெளிப்படைத் தன்மையான கணிப்பீட்டை நடத்துவதுதான் அரசாங்கம் முதலில் செய்திருக்க வேண்டியதாகும்.

ஏழ்மையான மக்களுக்கு நிவாரணம் வழங்கவென அரசாங்கம் அஸ்வெசும எனும் கண்மூடித்தனமான நிவாரணத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 12 லட்சம்பேருக்கு 3 ஆண்டுகளுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

நாட்டில் 70 லட்சம் ஏழ்மையான மக்கள் இருக்கும்போது 12 லட்சம் பேருக்கு நிவாரணம் வழங்குவதன் நோக்கம் என்னவென அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகின்றோம்.

எந்த கணக்கெடுப்பின், எந்தத் தரவுகளின் அடிப்படையில் இந்த 12 லட்சம் பேர்தெரிவுசெய்யப்பட்டனர் என்றும் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதேச்சதிகாரமாக உரங்களை தடைசெய்து, முழு நாட்டையும் பஞ்சத்தில் தள்ளினார்.

அவருக்குப் பின் இடைக்கால ஜனாதிபதியாக வந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முழு நாட்டையும் ஏமாற்றி முழுநாட்டுமக்களையும் மரணப் படுக்கைக்குக் கொண்டு சென்றுகொண்டிருக்கிறது.

கோட்டாபயராஜபக்ஷவின் அரசாங்கம் நாட்டுக்கு செய்யப்போகும் பாரதூரமான அவலங்கள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியாகி நாம் முன்னரே நாட்டுக்கு எச்சரிக்கை விடுத்தோம்.

தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் முன்னைய அரசாங்கத்தின்செயற்பாடுகளுக்கு எந்த விதத்திலும் இரண்டாம் பட்சமில்லை என ஆரம்பத்திலிருந்தேஎச்சரித்துவருகின்றோம்.

எவ்வாறாயினும், நாட்டையும் நாட்டு மக்களையும் ஆபத்தில் ஆழ்த்துவது மட்டுமே அரசாங்கத்தின் ஒரே விருப்பமாக அமைந்திருப்பதோடு, அவ்வாறானநோக்கம்இல்லாமல் இருப்பதாக இருந்தால் மக்கள் மீது இவ்வளவு அழுத்தத்தை பிரயோகிக்க அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது.

தற்போது நாட்டுக்கு முக்கியமான சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் கூட ஒரு பொதுவான இலக்குடன் ஒன்றாகஇணைந்து நாட்டுக்காக சிந்திக்கப்படுவதை விடுத்து, வெறுமனே தனது குறுகிய இலக்குகளை அடைவதற்காகவே அரசாங்கம் இதை செய்யும் நிலைக்கு வந்துள்ளது.

இவை அனைத்தும் சந்தர்ப்பவாத அரசாங்கத்தின் குறுகிய நோக்கற்ற தன்னிச்சையான செயல் முறையேதவிரவேறொன்றையும் புலப்படுத்துவதாக இல்லை.

இந்நிலையை மாற்றி மக்கள் சார் சிந்தனைவாயிலாக புதிய மக்கள் ஆணையின் மூலமே நாட்டைக்கட்டியெழுப்பமுடியும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

இதற்காக அரசாங்கத்துக்கு அனைத்து அழுத்தங்களையும் பிரயோகிப்போம் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் வறுமை நிலையில் உள்ள 70 லட்சம் மக்களும் உள்வாங்கப்பட வேண்டும். குறுகிய நோக்கங்களை இலக்காகக் கொண்டு அறிவியலற்ற முறையில் முன்வைக்கும் நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக, விஞ்ஞானபூர்வமான திட்டத்தின் மூலம் உண்மையான தேவைகளை அடையாளப்படுத்துபவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

நாட்டில் நிலவும் கடுமையான மருந்துப்பற்றாக்குறைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும். இதற்குத்தேவையான ஒத்துழைப்பை ஐக்கிய மக்கள் சக்தி வழங்கும் என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்கிறோம். – என்றுள்ளது. (05)

# போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமை குடும்பங்களுக்கு உதவ முன்வாருங்கள்

## உலகத் தமிழர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தின் ஈழத் தமிழர் பேரவை அழைப்பு

இனப்படுகொலையின் விளைவாக பெண் தலைமைத்துவ வாழ்வுக்கு உள்ளாக்கப்பட 90 ஆயிரம் ஈழத் தமிழ் பெண்களும் அவர்களது குடும்பங்களை சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் சிறுவர்களும் கடந்த 14 ஆண்டுகளில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர் என கவலை வெளியிட்டுள்ள ஐக்கிய இராச்சியத்தின் ஈழத்தமிழர் பேரவை, இப்பெண் தலைமைத்துவ குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய உலகத் தமிழர்களாகிய அனைவரும் ஒரு பொது வெளியில் கூட்டிணைந்து செயற்திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளனர்.

உலகளாவிய ரீதியில் வறுமை, பாலியல் வன்கொடுமை, சுகாதாரப் பிரச்சினை, அரச இராணுவ அடக்குமுறைகள் போன்றவற்றால் சுமார் 258 மில்லியன் விதவைப்பெண்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர் எனத் தரவுகள் கூறுகின்றன. இந்நிலையில், இலங்கையில் 2009 ஆம் ஆண்டு தமிழனம் மீதான முள்ளிவாக்கால் இனவழிப்பில் ஒரு லட்சத்து 46 ஆயிரம் ஈழத்தமிழர்கள் இன்னப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர். அதன்போது தாயையோ, தந்தையையோ அல்லது பெற்றோர்கள் இருவரையுமோ இழந்து 50 ஆயிரம் சிறுவர்கள் அநாதைகளாகப்பட்டுள்ளனர் என்பதை உலகத்தின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம்.

இந்த இனப்படுகொலையின் விளைவாகப் பெண் தலைமைத்துவ வாழ்வுக்கு உள்ளாக்கப்பட 90 ஆயிரம் ஈழத்தமிழ் பெண்களும் அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் சிறுவர்களும் கடந்த 14 ஆண்டுகளில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

விதவைகள் என்ற காரணத்தால் இந்தப் பெண்கள் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வகிபாகத்தில் இருந்து வெளியேற்றப்படுகின்றமையால் பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சம் ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அத்தியாவசிய சேவைகளை அணுக அல்லது வருமானம் பெற முயற்சிக்கும் போது இராணுவ மற்றும் புலனாய்வுக் கட்டமைப்புக்களால் பாலியல் சுரண்டல்களுக்கும், பேரம்பேசல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றன என ஐ.நா. பெண்கள்அமைப்பின்அறிக்கையொன்று கூறுகின்றது. ஆயினும் தற்போது வரை ஐக்கியநாடுகள்சபையின்அனைத்துலக சட்டங்களின் ஊடாகப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமல் இலங்கைப் படையினரின் அச்சுறுத்தலுடனேயே பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. சர்வதேச நாணய நிதியம் ஈழத்தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்காமல் இலங்கைக்கு அளித்துள்ள நிதியுதவி இலங்கையின் தமிழின அழிப்பு அரசியலை மேலும் ஊக்குவிக்கும் என வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் உள்ளிட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உலகத்தமிழர்களாகிய நாம் ஒரு பொது வெளியில் கூட்டிணைந்து செயற்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். வெறும் அழைப்பாக மாத்திரமின்றி இதனை நடைமுறைப்படுத்துவதற்கே நாம் விரும்புகின்றோம். எம்மோடு இணைந்துபணியாற்றவிரும்புபவர்கள் எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு உதவ முன்வருமாறு கேட்டுக்கொள்கிறோம். – என்றுள்ளது. (05)

# மூத்த ஆலிம் ஆதம் லெப்பை ஹஸரத் மறைவு கவலையைத் தருகின்றதாம்!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் அஞ்சலி



நாடறிந்த மூத்த ஆலிம் ஆதம் லெப்பை ஹஸரத் மறைவு நமது சமூகத்துக்கு பேரிழப்பாகுமென்றும் அவரின் மறைவு பெருங்கவலை தருவதாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஆதம்லெப்பைஹஸரத்அவர்களின் மறைவையொட்டி, அவர்வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில்குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

காத்தான்குடியின் அரபுக் கல்லூரிகள் பலவற்றின் உஸ்தாதாகவும் பொறுப்பாளராகவும் சிறப்பாகக் கடமையாற்றிய அவர், மார்க்கக் கல்விக்காகவும் இஸ்லாமியப் பிரசாரப் பணிக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த பேரறிஞர்.

தனிப்பட்ட சொந்த வேலைகள், குடும்ப நலனுக்கு அப்பால் இஸ்லாத்தின் எழுச்சியை மதித்த அன்னார், மக்கள் உள்ளங்களில் மார்க்கக் கடமைகளை உணர்த்தி, ஆழமாகப் பதித்தவர். அவரிடம் மார்க்கக் கல்வியைக் கற்ற ஏராளமான மாணவர்கள் சிறந்த மார்க்க அறிஞர்களாகவும், உலமாக்களாகவும் திகழ்கின்றனர். இவ்வாறான மார்க்க அறிஞர் ஒருவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், மாணவர்கள், நண்பர்கள் மற்றும் ஊரவர்களின் கவலையில் நானும் பங்குகொள்கின்றேன்.

அல்லாஹ்வின் நாட்டப்படி நடந்துவிட்ட இந்த இழப்பை பொறுமையோடுஏற்றுக்கொண்டு, அன்னாரின் மறுமை பேறுகளுக்காகப் பிரார்த்திப்போம். என்றார். (05)

# செல்வச்சந்நிதியான் ஆலய முன்றிலிருந்து கதிர்காம ஆலயம் நோக்கி வேல் பவனி







வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து மணிக்கு செல்வச்சந்நிதியான் முன்றலிருந்து கதிர்காம கந்தன் ஆலயம் நோக்கி ஆரம்பமானது. தெய்வீக இராகத்துடன் சந்நிதியான் பக்தர்கள் பலர் கலந்துகொண்டு பவனியாக எடுத்து செல்லப்படவிருந்த வேலை பக்திபூர்வமாக வழிபட்டிருந்தனர்.

குறித்தவேல்பவனி, இலங்கைரூபவாஹினி கூட்டுத்தாபனம், தேசிய தொலைக்காட்சி வலையமைப்பின் அனுசரணையுடன் முதன் முறையாக யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் நோக்கி ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM
FAAST-F2T
80-85 KM
FREEDOM
70-75 KM
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3

காலைக்கதிர் Kalaikkathir

# குற்றச் செயல்களோடு தொடர்புடையவர்களிடம் பொலிஸார் எம்மைக் காட்டிக்கொடுக்கின்றனர்!

## கிராம அலுவலர்கள் குற்றச்சாட்டு

யாழில் சட்ட விரோத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களின் பெயர் விவரங்களை கிராம சேவையாளர்கள் பொலிஸாருக்கு வழங்கினால், தகவல்களை வழங்கிய அந்த கிராம சேவையாளர்களின் பெயர்களை சட்ட விரோத செயற்பாடுகளுடன் தொடர்புடைய நபர்களுக்கு பொலிஸார் வழங்குகின்றனர் எனக் கிராம அலுவலர்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் அமைச்சரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாவட்ட கிராம அலுவலர்களுக்கு இடையிலான சந்திப்பின்போதே அலுவலர்கள் மேற்படி கருத்து தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

கிராமத்தில் இடம்பெறும் சட்ட விரோத செயற்பாடுகளோடு தொடர்புடையவர்களின் பெயர்கள் மற்றும் சில விவரங்களை கிராம சேவையாளர்கள் பொலிஸாருக்கு வழங்குகின்றனர்.

பொலிஸாருக்கு தகவல் வழங்கும் கிராம சேவையாளரின் பெயரை சட்ட விரோத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள், சில மணித்தியாலங்களுக்குள்ளேயே அந்த பொலிஸார் மூலமாக அறிந்துகொள்கிறார்கள்.

யாழ். மாவட்டத்தில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டுவது போன்ற குற்றச் செயல்கள் தொடர்கின்றன.

இந்தச் சம்பவங்களோடு தொடர்புடைய கிராம மட்டத்தில் இருக்கும் நபர்களின் பெயர் விவரங்களை பொலிஸ் நிலையத்துக்கு வழங்குகிறோம்.

குற்றச் செயல்களோடு தொடர்புடையவர்கள் பற்றிய தகவல்களை வழங்கிய பின்னர், சில மணித்தியாலங்களில் எந்த கிராம சேவையாளர், யாருடைய பெயரை கொடுத்தார் என்ற விவரம் சந்தேக நபர்களிடம் செல்கிறது.

இந்த தகவல்களை கிராம சேவையாளர்கள் பொலிஸாருக்கு வழங்கும்போது அவற்றை பொலிஸார் சந்தேக நபர்களுக்கு, இவர்தான் கூறினார் எனத் தெரிவிக்கிறார்கள்.

இதனால் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களால் கிராம சேவையாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது என தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா -

தகவல் வழங்கும் கிராம சேவையாளர்களுக்கு அச்சுறுத்தல் இருக்குமானால், எனக்கு விவரங்களை அனுப்புங்கள். அல்லது உங்கள் பிரதேச செயலாளர் ஊடாக அரசாங்க அதிபருக்கு தகவல்களை அனுப்புவதன் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும். - என்றார். (05)

# தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்ட அபிவிருத்தி செயலமர்வுகள் நடந்தன

## பதில் பாதுகாப்பு அமைச்சர் தலைமையில்

தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டத்தை அபிவிருத்தி செய்யும் நிகழ்வில் பதில் பாதுகாப்பு அமைச்சர் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பங்குதாரர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

2023 - 2028ஆம் ஆண்டுக்கான தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயலமர்வு கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் கலந்துகொண்டார்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த செயலமர்வில் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் கலந்துகொண்டனர்.

இந்த செயலமர்வில் ஐ.நா.முகவர்கள், சர்வதேச பங்காளிகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச மற்றும் தனியார் துறை அதிகாரிகள், முப்படைகள், பொலிஸ் மற்றும் தீயணைப்பு படை பணியாளர்கள், அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அனைத்து முரண்பாடுகளையும் எதிர்கொண்டு எமது சக குடிமக்களின் உயிர்களையும் நல்வாழ்வையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பு இந்த செயலமர்வில் கலந்துகொண்ட பங்குதாரர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக செயலமர்வில் உரையாற்றிய பதில் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், வெள்ளம், மண்சரிவு மற்றும் வறட்சி உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களினால் இலங்கை பாதிப்படைய இருப்பதால், எதிர்காலத்தில் அதனை எதிர்கொள்ள வேண்டிய அனர்த்த முகாமைத்துவ முன்னெச்சரிக்கை மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானதாகும் என அமைச்சர் தெரிவித்தார்.

'நாம் தற்போது பின்பற்றும் நடைமுறைகள் ஒரு மூலோபாய செயற்திட்டங்களின் அடிப்படையில் தொலைநோக்கு இலக்குகளுடன் புதுப்பிக்கப்பட வேண்டும்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அனர்த்தங்களினால் ஏற்படும் தாக்கத்தை திறம்பட தணிக்க எந்தவொரு தனி நிறுவனமும் சவால்களை எதிர்கொள்ள முடியாது. அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றுசேர்த்து, அரசாங்க நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் சமூகத்தின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம் மட்டுமே நம் மக்களை பெரிதாக பாதுகாக்க முடியும். (05)

# 25 கர்ப்பிணி தாய்மார்களுக்கு காரைதீவில் உலர் உணவுகள்

## ஹற்றன் நாஷனல் வங்கி வழங்கியது



(வி.ரி. சகாதேவராஜா)

ஹற்றன் நாசனல் வங்கியின் சமூக மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் கீழ் காரைதீவு பிரதேசத்தில் 25 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. காரைதீவு ஹற்றன் நாசனல் வங்கியின் முகாமையாளர் கே.ஜெயபாலன் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக வங்கியின் பிராந்திய முகாமையார் என் .கேதீஸ்வரன் கலந்து சிறப்பித்தார். காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் தஸ்ஸிமா பஷீர் கௌரவ அதிதியாகவும், வங்கியின் பிராந்திய கடன் பிரிவுத் தலைவர் எஸ்.சத்தியசீலன், பிராந்திய கடன் அறவீட்டுப் பிரிவுத் தலைவர் ஏ.எல்.சிறாஜ் அகமட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கர்ப்பிணி தாய்மார்களுக்கு மூன்று மாதங்களுக்கு தேவையான மாதாந்த உலர் உணவுப் பொதிகள் சுகாதார வைத்திய அதிகாரி ஊடாக வழங்கப்பட்டன. சமகால பொருளாதார நெருக்கடியில் இருந்து கர்ப்பிணி தாய்மாரை மீட்டு உடல் நலத்தின் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் முகமாக இத்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது.

# கல்முனை பாலிகா பழைய மாணவிகள் சங்கம் புதிய நிர்வாகம் தெரிவு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கையின் புகழ் பெற்ற பாடசாலைகளில் ஒன்றான கல்முனை மஹ் மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) பழைய மாணவிகள் சங்கத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டம் பாடசாலையின் சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் கல்லூரி அதிபர் யூ.எல். அமீன் தலைமையில் கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியும், கல்முனை கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளருமான ஏ.பி.எப். நஸ்மியா சனூஸ் உட்பட பழைய மாணவிகளின் பங்குபற்றலுடன் அண்மையில் நடைபெற்றது.

இந்த பழைய மாணவிகள் சங்கத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டத்தில் பாடசாலை கல்வி, பௌதீக அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அதில் பதவி வழியாக பாடசாலை முதல்வர் யூ.எல்.அமீன் தலைவராகவும், செயலாளராக கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், கல்முனை சட்டத்தரணிகள் சங்க உப தலைவருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பரும், பொருளாளராக விரிவுரையாளர் ஏ.பி.எஸ். றிகானாவும் தெரிவு செய்யப்பட்டனர். உப தலைவராக ஷாமிலா ஜஹ்பர், உப செயலாளராக எம்.எம். உம்மு ஹபீபா, உப பொருளாளராக ஏ.சி. பஸ்லுனா, கணக்காய்வாளராக எம்.எம். சியாதா ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாக ஏ.எச்.சித்தி சபீனா, எம்.ஐ. சபானா, ஏ.எச். ஜெஷ்மின் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த புதிய நிர்வாகம் எதிர்கால பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க தயாராகி வருகின்றனர்.

# காட்டு யானைகள் அட்டகாசம் மக்கள் வாழ்வாதாரம் பாதிப்பு



கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானைகளால் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதியில் வாழும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது ஒரு வார காலமாக தொடர்ச்சியாக மக்கள் குடியிருப்பு பகுதியில் 6 மணி தொடக்கம் அதிகாலை வரை காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் எனவும் நாளாந்த கடமைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாகவும், ஆறு மணிக்கு பின்னர் வீடுகளிலேயே முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமையும் கல்மடுநகர் பகுதியில் இரண்டு காட்டு யானைகள் குடியிருப்புக்குள் நுழைந்து வாழ்வாதாரமாக வைக்கப்பட்டிருந்த 45 இற்கு மேற்பட்ட 10 வருடம் கடந்த பயன் தரக்கூடிய தென்னைகளை முற்றுமுழுதாக அழித்துள்ளன என கவலை வெளியிடுகின்றனர்.

இது தொடர்பாக கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் அரசியல்வாதிகள் தாம் வசிக்கும் பகுதிக்கு வருகை தந்து கல்மடு தொடக்கம் இரணைமடு பகுதிவரை மின்சார வேலி அமைக்கும் பணி விரைவாக முன்னெடுக்கப்பட இருப்பதாக தெரிவித்து சென்றுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்பின் இது வரையில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலை இருப்பதாகவும் இதன் காரணமாக அப்பாவி மக்களாகிய நாமே பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் இந்நிலை தொடருமாயின் தென்னை செய்கையையும் கைவிட்டு இப்பகுதியில் இருந்து வேறு பகுதிக்கே மக் களும் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் அபாய நிலை தோன்றியுள்ளதாகவும் மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (05)

# திருமலை – அ'புர கலைஞர்கள் இடையே சமூக நல்லிணக்க ஒன்றுகூடல் நிகழ்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை மற்றும் அநுராதபுர மாவட்ட செயலக கலாசார பிரிவுகளின் ஏற்பாட்டில் இரு மாவட்டக்கலைஞர்களுக்கும் இடையேயான சமூக நல்லிணக்க ஒன்றுகூடல் நிகழ்வானது மாவட்டச் செயலர் பி.எச். என். ஜயவிக்ரம தலைமையில் வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

கலைஞர்களுக்கு இடையேயான சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே இவ்வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும் என்று தெரிவவிக்கப்பட்டது.

கலைக்கு இன, மதபேதம் கிடையாது. அனைவரும் அதனை ரசிக்க முடியும் என மாவட்டச் செயலர் அங்கு தெரிவித்தார். இந்நிகழ்வில் 150இற்கும் மேற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் கலந்துகொண்டனர். கலாசார நடனம், பாடல், கதை, நாடகம், கவிதை, போன்ற பலவகையான நிகழ்ச்சிகள் மேடையை அலங்கரித்தன.

நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிகச் செயலர் ஜே.எஸ்.அருள்ராஜ், அநுராதபுர மாவட்ட மேலதிகச் செயலர் சாமில விக்கிரம ஆராய்ச்சி, திருகோணமலை மாவட்ட மேலதிகச் செயலர் (காணி) எஸ்.சுதாகரன் இரு மாவட்டங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# நிந்தவூர் பொலிஸ் நிலையத்திற்கு குடிதண்ணீர்த் தாங்கி அன்பளிப்பு

(மாளிகைக்காடு நிருபர்)

குவைத் நாட்டின் அந்-நஜாத் சர்வதேச தொண்டு நிறுவன நிதி அனுசரணையில் இலங்கை அந்நூர் சேரிட்டி சமூக அமைப்பினால் நிந்தவூர் பொலிஸ் நிலையத்திற்கு இலவச குடிதண்ணீர் தாங்கி நிர்மாணித்து இலவச நீர் இணைப்பை பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு நேற்றுக் காலை பொலிஸ் நிலைய முன்றலில் நடைபெற்றது.

அரச காரியாலயங்கள், பாடசாலைகள், மதஸ்தலங்களுக்கு இலவச குடிதண்ணீர் வழங்குதல் மற்றும் பல சமூக நல வேலைத் திட்டங்களை அந்நூர் சமூக அமைப்பு மக்களுக்காக தொடர்ந்தும் நாடு முழுவதும் செய்து வருகின்றது.

அவர்களின் வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக அந்நூர் சமூக அமைப்பின் பிரதேச இணைப்பாளர் ஐ.எல். றிசாட் தலைமையிலான குழுவினர் நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் தண்ணீர் தாங்கியை நிர்மாணித்து பொலிஸாரிடம் உத்தியோகபூர்வ மாகக் கையளித்தனர்.

நிந்தவூர் பொலிஸ் நிலையம் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிகழ்வு நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ. எம். எம். நஜீப் தலைமையில் நடைபெற்றது.

அல் - மீஸான் பௌண்டன் ஸ்ரீலங்கா தவிசாளர் யூ. எல்.என். ஹுதா உமர், இலங்கை அந்நூர் சேரிட்டி சமூக அமைப்பின் இணைப்பாளர்களான எம்.எச். இல்யாஸ், மௌலவி ஏ.பி.எம். சிம்லி மற்றும் அந் நூர் செரிட்டி உத்தியோகாத்தர்கள், நிந்தவூர் பொலிஸ் நிலைய பொலிஸார் என பலரும் கலந்து கொண்டனர்.

# சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை சீர்குலைத்தால் நாடு பின்னோக்கிசெல்லும்!

## எச்சரிக்கிறார் ரஞ்சித் சியாம்பலபிட்டிய



சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டம் சீர்குலைந்தால் நாடு கடந்த வருடம் ஜூலை மாதம் இருந்த நிலைமைக்கு திரும்பும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ள நிலையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (05)

# காரைதீவில் சிறப்பாக இடம்பெற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தியாகிகள் தினம்

(காரைதீவு நிருபர் சகா)

ஈபிஆர்எல்எவ் அமைப்பின் 33ஆவது தியாகிகள் தினம் நேற்று காரைதீவு விபுலானந்தா கலாச்சார மண்டபத்தில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது. காலை 10.30 மணியளவில் அம்பாறை மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பாளர் எஸ். புண்ணியநாதன் கரன் ஏற்பாட்டில் சர்மா தோழரின் தலைமையில் நடைபெற்றது. வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து சிறப்பித்தார். மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்து உயிர் நீத்தவர்களின் உறவுகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். ஜூன் 19 தமிழகத்தில் தோழர் பத்மநாபாவும் 13 தோழர்களும் படுகொலை செய்யப்பட்ட தினத்தையே தியாகிகள் தினமாக அனுஷ்டித்து வருகிறார்கள் .

சிவசக்தி ஆனந்தன் மறைந்த தலைவர் தோழர் பத்மநாபாவின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை சூட்டி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். கணிசமான எண்ணிக்கையானவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# சுகாதார மேற்பார்வையாளருக்கு நினைவுச் சின்னம் சூட்டி பாராட்டு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மனிதவள அபிவிருத்தி அமைப்பு கல்முனை மாநகர சபையின் பிரதான திண்ம கழிவகற்றல் செயற்திட்டத்தில் தன்னை முழுமையாக அர்பணித்து முழு ஈடுபாட்டுடன் இரவு பகல் பாராது நேர்த்தியான முறையில் தனது சேவைகளை வழங்கி வரும் சுகாதார மேற்பார்வையாளர் எம்.எம். முகமது ரிஸ்வான் அவர்களை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தது. கல்முனையில் அமைந்துள்ள அமைப்பின் காரியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை மனிதவள அபிவிருத்தி அமைப்பின் தலைவர் வைத்திய கலாநிதி எம். எச். ரிஸ்பின், செயலாளர் எம்.எம்.எம். காமில் மற்றும் அமைப்பின் செயற்குழு, நிருவாக சபை உறுப்பினர்கள் மற்றும் அமைப்பின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் ஒன்றரை லட்சம் ரூபாய் பணத்தை குப்பை பையில் தவறுலாக போட்டு, அதனை குப்பை சேகரிக்கும் வண்டிக்கு அனுப்பிய ஒருவர், பிறகு அந்தப் பணத்தை பெரும் முயற்சிகளின் பின்னர் பெற்றுக் கொண்ட சம்பவமொன்று கல்முனைப் பிரதேசத்தில் நடந்தது. இந்த பணத்தை இழந்தவர் துரிதமாக மீளப்பெற காரணமாக அமைந்திருந்தவர் இந்த பாராட்டை பெற்றார் றிஸ்வான்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.06.2023இல் வெளியிடப்பெற்றது.